Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 20 (08.08.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :310

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல்,மூக்குக் கண்ணாடியகம்



இல.545, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 28.06.2004 தொடக்கம் இயங்கிவருகிறது.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]

(சீ/2494)

தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றிய நாகலிங்கம்:

## தமிழீழ தேசியத் தலைவரால் விருது வழங்கி கௌரவிப்பு!

(கிளிநொச்சி)

ஜேர்மன் நாட்டில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் மத்தியில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், தாய்மொழிப்பற்றை உருவாக்குவதற்கும் உழைத்த இரா.நாகலிங்கம் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனால் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்க விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

இரா.நாகலிங்கம் தாய் மண்ணில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக, 1979 ஆம் ஆண்டு ஜேர்மன் நாட்டுக்குச் சென்றார். புலம் பெயர்ந்தாலும் தாய் மண்ணின் நினைவோடும், தாய் மொழியின் பற்றோடும் வாழ்ந்து வந்தார்.

1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பத்துப்பிள்ளைகளை ஒன்றாக்கி, ஜேர்மனியில் தமிழ் மொழியைப் போதித்தார். இதனோடு இவரது சேவை மேலும் விரிவுபட்டது.

1987 ஆம் ஆண்டு தமிழர் நலன்புரிச் சங்கம் தோற்றம் பெற்றது. இதில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். இவ்வாறாக பல அமைப்புக்கள், சங்கங்கள் ஊடாகத் தமிழுக்காகவும், தேசியப் போராட்டத்திற்காகவும் இவரது பணி தொடர்ந்தது.

1990 ஆம் ஆண்டு உலகத் தமிழர் இயக்கம் தோற்றம் பெற்றது. இது ஜேர்மன் அரசிலும் பதிவு செய்யப்பட்டது. இதில் இரா நாகலிங்கம் தமிழ்க்கல்விப் பணியின் பொறுப்பாளராக இருந்து, தமிழ் மொழியை வளர்த்தெடுப்பதற்காக இதே ஆண்டிலேயே ஜேர்மன் யூக்ஸன் நகரில் (12 ஆம் பக்கம் பார்க்க)



# பாரிய ஆயுதக்கொள்வனவுக்கு சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம்!

## முப்படைகளையும் வலுப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

புலனாய்வுப் பணிப்பாளரின்

## புலனாய்வுப் பணிப்பாளரின்

# பதவி விலகுவதற்கான விண்ணப்பம்; இராணுவத் தளபதி விரைவில் முடிவு!

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறையின் பணிப்பாளரான பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண, ஓய்வு பெறுவதற்குச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆராய்ந்து வருவதாகவும், இது குறித்து அவர் விரைவில் முடிவெடுப்பார் எனவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கிய விவகாரத்தில் எழுந்த சர்ச்சைகளையடுத்து -

இராணுவப் புலனாய்வுத் துறையின் பணிப்பாளரான பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண முன்கூட்டியே ஓய்வுபெற விண்ணப்பித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# முப்படைகளையும் வலுப்படுத்த அரசு நடவடிக்கை

(கொழும்பு)

**முப்படைகளுக்குமான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக இலங்கை அரசாங்கம் சீன மக்கள் குடியரசின் நொறிங்கோ ஆயுத தளபாட உற்பத்தி நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.**

**1995 ஆம் ஆண்டில் நாட்டில் யுத்தம் தீவிரமடைந்ததையடுத்து சீனாவின் நொறிங்கோ நிறுவனத்துடன் செய்துகொண்ட ஆயுத தளபாடக் கொள்வனவு குறித்த ஒப்பந்தம் கடந்த 2002 ஆம் ஆண்டு முடிவடைந்திருந்தது.**

**எனினும், அப்போது போர் நிறுத்தம் அமுலில் இருந்தாலும் இந்த ஒப்பந்தத்தை அரசாங்கம் நீடிக்கவில்லை. ஆனாலும் இப்போது இந்த ஒப்பந்தத்தை அரசாங்கம் புதுப்பித்துள்ளது.**

இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத், சீன அரசின் சார்பில் நொறிங்கோ நிறுவனத்தலைவர் லீடே இருவரும் கையெழுத்திட்டனர்.

இந்த நொறிங்கோ ஒப்பந்தத்தின் கீழ் சீனாவிடமிருந்து இலங்கைப் படைகளுக்குத் தேவையான ரி-56 ரகத் துப்பாக்கிகள், மோட்டார் குண்டுகள், யுத்த டாங்கிகள், 152 மில்லி மீற்றர் ஆட்லறிகள், ஷெல் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்புக்கு நோர்வேயிடமிருந்து சாதகமான பதில்!

## விரைவில் கிடைக்குமென அரசு நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால், நோர்வே அரசாங்கத்துக்கு விடுக்கப்பட்ட அவசர அழைப்புக்கு விரைவில் சாதகமான பதில் கிடைக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால அரசாங்கத்தின் சார்பில் கருத்து வெளியிடுகையில்-

ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட அழைப்புச் செய்தியுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## டிப்ளோமா பட்டதாரிகள்

# நாளை அரச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்துக்குத் திட்டம்!

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து, நாளை யாழ்.செயலகம் முன், மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

எச்.என்.டி.ஏ, எச்.என்.டி.சி பட்டம் பெற்றவர்கள் பட்டதாரிகளாக ஏற் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சித்தாண்டியில் பெண் சுட்டுக் கொல்லப்பட்டார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் 52 வயதான பெண் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு தனது வீட்டில் வைத்து அடையாளம் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சம்பவத்தின்போது இவரது மகளும், மகளின் குழந்தையும் வீட்டில் இருந்தார்கள் என்று இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரி-56 ரகத்துப்பாக்கி வெற்று ரவைகள் 16, மேலும் பாவிக்கக்கூடிய ரவைகள் இரண்டும் மீட்கப்பட்டன.

# குரங்குபாஞ்சானுக்கு சென்ற எழிலன் படையினரால் நேற்று தடுத்து வைப்பு!

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தலைமையிலான போராளிகள் மூதூர் கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு இரு மணித்தியாலத்தின் பின்னர் தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் குரங்குபாஞ்சான் முகாமில் நேற்றுக்காலை நடைபெறவிருந்த முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொள்வதற்காக எழிலனுடன் எட்டுப் போராளிகள் சென்றிருந்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசியல் நடவடிக்கைகளுக்குச் செல்வதற்கு ஐந்து போராளிகளை மட்டும் அனுமதிக்க (12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.



EXPOAIR

Your friend in the skies...

# டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையில் மந்திகை வைத்தியசாலை ஊழியர்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சல் நோய் பரவாமல் மேற்கொள்ளப்பட்டுவரும் தடுப்பு நடவடிக்கைகளில் ஓர் அங்கமாக மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சுற்றுப்புறச் சூழல் பகுதிகள் சிரமதான அடிப் படையில் துப்புரவு செய்யப்படடு வருகிறது.

இந்தத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது.

வடமராட்சியில் உள்ள திணைக் களங்கள், பொதுநிறுவனங்கள் மேற் கொள்ளும் தடுப்பு நடவடிக்கைக ளில் ஓர் அங்கமாக மந்திகை அரசி னர் ஆதார வைத்தியசாலையைச் சூழவுள்ள பற்றைகள், புதர்கள் வெட் டப்பட்டு வருகிறது.

வைத்தியசாலையில் பணியாற் றும் ஆண், பெண் தொழிலாளர்கள், பரிசாரகர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் தினமும் முற்பகல் 10.30 முதல் பிற்பகல் 1.00 மணிவரை தமது அன்றாடக் கடமைகளை விடுத்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டு வரு கின்றனர். இப்பணியின்போது, வைத் தியசாலை வளாகத்திலுள்ள குப்பை களை அப்புறப்படுத்தி புல், பூண்டு களும் வெட்டப்பட்டு வைத்தியசாலை வளவு முழுவதும் துப்பரவாக்கப் பட்டு வருகின்றது.

டெங்குக் காய்ச்சல் பரவிவரு வதையடுத்து வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் இந்நோயைத் தடுப் பதற்கு பெரியளவிலான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகிறது.

# இன்பருட்டி மீன் சந்தை திறந்து வைக்கப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இன்பருட்டி கடற் கரையில் கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி மீன்சந்தையும் இளைப் பாறும் மண்டபமும் திறந்துவைக்கப் பட்டது.

மீன்சந்தையை யாழ்.மாவட்ட கடற்றொழில் உதவிப்பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசேப் திறந்துவைக்க இளைப்பாற்றுமடத்தை வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் எஸ்வசந்த குமார் திறந்துவைத்தார்.

மீன்சந்தை 5 லட்சம் ரூபா செல விலும் இளைப்பாற்றுமடம் 2 இலட் சம் ரூபா செலவிலும் அமைக்கப் பட்டன. இந்தக் கட்டடங்கள் முன் னைய இந்து கலாசார அமைச்சின் நிதியிலிருந்தும், கடற்றொழில் திணைக்களத்தின் நிதியிலிருந்தும் அமைக்கப்பட்டன.

### சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின்

# பெயர் மாற்றும் முயற்சிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு!

சங்கானை பலநோக்குக் கூட்டு றவுச் சங்கத்தின் பெயரினை மாற் றுவதற்கு அந்தப்பகுதி பொதுமக் களும், பொது அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

சங்கானை பலநோக்குக் கூட்டு றவுச் சங்கம் என்று ஆரம்பகாலம் முதல் இயங்கிவரும் சங்கத்தின். பெயரை, வலிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எனப்பெயர் மாற் றம் செய்வதற்கான முயற்சிகளை, சங்க நிர்வாகம் எடுத்துள்ளது.

இந்தப் பெயர் மாற்றம் செய்யும் நடவடிக்கையினை இங்குள்ள பொதுமக்களும், பொது அமைப்புக் களும் தமது எதிர்ப்பினையும், ஆட் சேபனையையும் தெரிவித்துள்ளன என்றும், பெயர் மாற்றம் செய்வதில் சங்க நிர்வாகம் தீவிரமாகச் செயற் படுவதாக பொதுமக்களும், பொது அமைப்புக்களும் விசனம் தெரிவித் துள்ளன.

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சுழிபுரத்தில் கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தை முன் னிட்டு, வலி.மேற்குப் பிரதேசசபை யால் நடத்தப்படும் கண்காட்சி இன்று காலை 9.00 மணிக்கு சுழிபுரம் விக் ரோறியாக் கல்லூரியில் நடைபெற வுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக, சங்கானை பிரதேச செயலர், சி.ஏ. மோகன்றாஸ் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, சங்கானை கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா மற்றும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப் பாளர் க.ஜெயராஜும், சிறப்பு விருந் தினர்களாக விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை, சங்கானை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச.கைலாசநாதன், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மருதங்கேணி - வெற்றிலைக்கேணி வீதிகளில் கட்டாக்காலி நாய்கள்

## பயணம் செய்வதில் மக்கள் சிரமம்

வடமராட்சி கிழக்கு மருதங் கேணி தொடக்கம் வெற்றிலைக் கேணி வரையான பகுதியில் பெரு மளவு கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தால், வீதிகளில் பயணம் செய்யும் மாணவர்கள், பாதசாரிகள் போன்றோர் பீதியுடன் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது.

தற்போது அதிகமான வெய்யில் காலமாக இருப்பதனால், நாய்க ளுக்கு நீர்வெறுப்பு நோயும் ஏற்பட் டுள்ளது. இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் பயணஞ்செய்ய வேண்டி யுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து கட்டாக்காலி நாய்களை ஒழிப்ப தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு மென இந்தப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (17)

## கலந்துரையாடல்

மீளக்குடியமர அனுமதிக்கப் படாத தனங்களப்பு, மறவன் புலவு பகுதிகளில் காணப்படும் கால்நடை களை பாதுகாப்பது குறித்து நாளை காலை 9.00 மணிக்கு கலந்துரை யாடலொன்று கைதடி கமநல நிலை யத்தில் இடம்பெறவுள்ளது.

தனங்களப்பு, மறவன்புலவு பகுதி களில் மீளக்குடியமர அனுமதிக்கப் படாத பகுதி விவசாயிகளை இந் தக் கலந்துரையாடலில் பங்கு பற்று மாறு கைதடி கமநல நிலைய பொறுப்பான உத்தியோகத்தர் என். ஜெகதீஸ்வரி தெரிவித்தார். (29)




நான்காவது பிறந்ததின வாழ்த்துக்கள்

செல்வன் ர.நிகேஸ் (டினா)

பல்கலையும் கற்று பாரினில் நிமிர்ந்து நற்குணமுடன், நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கண்ணன் சித்தப்பா,

நெடுந்தீவு - 11 தயானி சித்தி, தங்கை பிரணவி


### பூநாறி மரத்தடி

## மதுபான விற்பனை நிலையம் இனந்தெரியாதோரால் தீ வைப்பு

யாழ்.கொக்குவில் பூநாறி மரத் தடியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுபான நிலையமொன்று இனந் தெரியாதோரால் தீயிடப்பட் டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றது.

மேற்படி மதுபான விற்பனை நிலையத்தில் அடிக்கடி அடிதடி நடைபெற்று வருவதாகவும் கூறப்படு கிறது.

இதன் காரணமாக அப்பகுதி மக்களுக்கு இந்த நிலையத்தால் பல அசௌகரியங்கள் ஏற்பட்டு வந்ததாகவும் தெரியவருகிறது.

தீயினால் நிலையத்தின் பெரும் பகுதி எரிந்து சாம்பராகியுள்ளது.(206)

## விளையாட்டு விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகஸ் வரி சனசமூக நிலையமும், கல்வி வளர்ச்சிக்கழகமும், இணைந்து நடத் தும் விளையாட்டு விழா இன்று பிற் பகல் 2 மணிக்கு தலைவர் அ.கஜேந் திரகுமார் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தி னராக யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## நூல்கள் வெளியீட்டு விழா

(அராலி)

அராலியூர் வி.செல்வரத்தினம் எழு திய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை வட்டுக் கோட்டை மாவடி அடைக்கலம் தோட் டம் ஸ்ரீகந்தசாமி கோவில் மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 'ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள்' 'தினசரி விடியும் வேளையில் அர்த்தமுள்ள ஆரோக் கியமான நல்வாக்கு', 'கந்தசஷ்டி கவ சம்' ஆகிய நூல்கள் வெளியிடப்பட் டன.

மு.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலா நிதி அருட்கவி சீ.விநாசித்தம்பி ஆசி யுரையும், நடேசன் [illegible].வசண்முக மூர்த்தி தொடக்கவுரையையும், நூல் கள் வெளியீட்டையும் நிகழ்தினார்.

## அலுவலகம் திறப்புவிழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவை அலுவலகம் நாளை சாவ கச்சேரி கந்தையா வீதியில் காலை 10.00 மணிக்கு தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் தலை மையில் திறந்துவைக்கப்படவுள் ளது.

தென்மராட்சிக் கோட்டத்திலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் முன் னெடுக்கப்படவுள்ள சமூகப் பொரு ளாதார அபிவிருத்தி மற்றும் புன ரமைப்பு வேலைத் திட்டங்களை மையமாகக்கொண்டு செயற்பட்டு வந்த தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்ற னர். (29)

## சமாசப்பணிமனை திறப்பு விழா

யாழ். மாவட்ட இடம் பெயர்ந் தோா நலன்புரி நிலையங்களின் சமா சப் பணிமனை நாளை காலை 10.30 மணிக்கு காங்கேசன் துறை வீதி யில் திறந்துவைக்கப்படவுள்ளது.

# இந்து குருமார் ஒன்றியத்தில் சமஸ்கிருத வகுப்புக்கள்

(உடுவில்)

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் புதிய சமஸ் கிருத வகுப்புக்கள் இந்தமாத நடுப் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகைதந் துள்ள திருச்சி என்.பரமேஸ்வரக் குருக்களால் இலவசமாக வேத சிவாகம வகுப்புக்கள் நடத்தப்பட வுள்ளது. அத்துடன் கணினி, ஜோதி டம், ஆங்கிலம், பண்ணிசை வகுப் புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பல்கலைக்கழகத்ததில் இந்து நாகரீகம் கற்கும் மாணவர்களும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

இந்த வகுப்பில் சேர விரும்பும் அந்தண சிவாச்சாரியர்கள் உடனடி யாக தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பங்களைப்பெற்று பூர்த்தி செய்து கொடுக்குமாறு செயலாளர் கா.சந்திரசர்மா தெரிவித்தார்.(101)

## கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

கோண்டாவில் வடக்கு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெரு மளவான கட்டாக்காலி நாய்கள் அதி கரித்துள்ளன. இதனால், அசௌகரி யங்களை எதிர்கொள்ளும் அப் பகுதி மக்கள் இதுபற்றி உரியவர் களிடம் முறையீடு செய்தும் எதுவித பயனும் இல்லையென விசனம் தெரி வித்துள்ளனர்.

## நிரந்தரக் கட்டடம் அமைக்க அரச நிதி

வலிகாமம் கல்வி வலயக் கட்ட டத்துக்கான முழுச் செலவினையும், அரசநிதியில் இருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தெரி வித்தார்.

இராமநாதன் நிதியம் வலிகா மம் கல்வி வலயத்துக்கென அன்ப ளிப்பாக வழங்கியுள்ள காணியை, கல் வித்திணைக்களத்துக்கு உடமை யாக்குவதற்கான நடவடிக்கை எடுக் கப்பட்டுவருவதாகவும், அந்த நடவ டிக்கை முடிவடைந்ததும் நிதி வழங் கப்பட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக் கப்படும் எனவும் அவர் தெரிவித் தார்.

இதனைத் தொடர்ந்து - இந்தக் கல்வி வலயக் கட்டடப் பணிகளுக் காக அதிபர், ஆசிரியர்களிடம் பணம் சேகரிப்பதில்லையென வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் உறுதி யளித்துள்ளதாக தெரிவிக்கப்படு கறிது.


நிறைஞ்சனாஸ் சங்கானை

நந்தா, ரேகா, வடிவேல் நடித்த

புன்னகைப் பூவே

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

Saving Private Ryan

நாகம்ஸ் சுன்னாகம்



ரஜினிகாந்த், நக்மா, ரகுவரன், ஜனகராஜ் நடித்த

பாட்ஷா

9 ஆம் திகதி முதல்

மானஸ்தன்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

சிம்பு, ரம்யாகிருஷ்ணன், மற்றும் மும்தாஜ் நடித்த



குத்து

சில தினங்கள் மட்டும்

காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)




## உதவுங்கள்...!

இல.14, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் வசித்து வரும் ஏழு மாத அகவையுடைய பெண் குழந்தையான

**பாஸ்கரன் பவித்திரா**

என்பவருக்கு இருதயத்தில் ஓட்டை (இரண்டு) உள்ளது. இவருக்கு உடனடி சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் கூறியுள்ளார்கள்.

மேலும் இச்சத்திரசிகிச்சைக்காக மொத்தமாக 350,000 ரூபா பணம் தேவைப்படுகின்றது. வறுமை கோட்டிற்கு உட்பட்ட இக்குடும்பத்திற்கு இவ்வளவு பெரிய தொகை கொடுத்து சத்திர சிகிச்சை செய்ய முடியாதுள்ளதால் பெறுமதி படைத்த யாவரும் இச்சிறுமியின் சத்திர சிகிச்சைக்கு வேண்டிய நிதியுதவியை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். கீழ்வரும் கணக்கிற்கு தங்களது உதவித்தொகைகளை செலுத்துமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கணக்கு இல 29115
இலங்கை வங்கி
கிளிநொச்சி.

"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது" ( குறள் )

கிளி / மருத்துவ சங்கம்
கிளிநொச்சி.

யாழ்ப்பாணம்



# நோர்வே அனுசரணையுடன் விரைவில் சமாதானப் பேச்சு!

## ஆரம்பமாகும் என்கிறார் ரட்ணசிறி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்களுக்குக் கொண்டு வரும் முயற்சியில், இதுவரை நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்க



ளால் வெற்றிகாண முடியவில்லை என்று, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் பொலிஸ் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் -

நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்கள் இன்னமும் புலிகளைச் சமாதானப் பேச்சுக்களுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நோர்வே தரப்பு சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கத்தின் சில யோசனைகளை வைத்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. அதேபோல், அரசாங்கத்திடமும் நோர்வே சில இடைக்கால யோசனைகளை சமர்ப்பித்துள்ளது.

இவை தொடர்பாக தற்சமயம் இருதரப்புடனும் நோர்வேத் தரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றோரே நாட்டில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை - இலங்கையின் சமாதான விடயத்தில் சகலரும் பொறுப்புடன் செயற்பட வேண்டிய தருணம் எழுந்துள்ளதாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

கூட்டணியில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளிடையேயும் ஒரு சில முரண்பாடுகள் தோன்றியபோதும், அந்த நிலை தற்போது சுமுகமாகத் தீர்க்கப்பட்டு வருகின்றது.

எனினும் - இந்தத் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நோர்வே தூதுக்குழுவினூடாக, மிகவிரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

இதேபோல் - விடுதலைப்புலிகள் அமைப்பினரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தங்களது சமிக்ஞையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் கூறினார். (01)

### தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக கந்தி விஜேதுங்க

(கொழும்பு)

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராக கந்தி விஜேதுங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஊடக மற்றும் தகவல் அமைச்சின் மேலதிக செயலாளராக இருக்கும் கந்தி விஜேதுங்கவை உடனடியாக இந்தப் பதவிக்கு அரசாங்கம் நியமித்திருக்கிறது.

இவர் தொடர்ந்து, இரண்டு பதவிகளையும் வகிப்பாரென்று தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## சிவிலுடைப் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிப்பு!

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், சிவில் உடையில் கடமையாற்றும் பொலிஸாரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிககத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். மேல்மாகாணத்தைப் போலவே நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

மேல்மாகாண பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் 24 மணிநேரமும் பொலிஸ் ரோந்துச் சேவை இடம்பெறவிருக்கிறது.

இந்த அடிப்படையில் கொழும்புக்கு வரும் வாகனங்களில் சந்தேகத்துக்கிடமான வாகனங்களைச் சோதனையிடுவதற்கு இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸார் செயற்படவுள்ளனர்.

## இனப்பிரச்சினைத் தீர்வில் ஜே.வி.பி இரட்டை வேடம்!

### ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜே.வி.பிக்கு உரிய கொள்கைகள் எதுவும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சியின் பதில் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

முன்னர் ஜே.வி.பி இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் பேச்சுக்களை ஆரம்பித்தால், உடனடியாகவே அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக எச்சரிக்கை செய்திருந்தது. எனினும், நேற்று முன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் அமைச்சரான அநுரகுமார திஸநாயக்க இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசியல்ரீதியான மாற்றங்கள் - காலத்துக்குக் காலம் வரக்கூடும் என்ற கருத்தைத் தெரிவித்தார்.

இது இடைக்கால நிர்வாகத்தை ஜே.வி.பி ஏற்றுக்கொள்வதற்கு சமனானதாகும். எனவே, ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் சமாதானத் தீர்வை விட தமது அரசியல் காய் நகர்த்தலிலேயே முனைப்பாக இருப்பதாகவும் திஸ்ஸஅத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

## கட்டாய மதமாற்றத்தை தடைசெய்யும் சட்டமூலம் குறித்து மேன் முறையீட்டு நீதிமன்றம் ஆராய்வு

(கொழும்பு)

கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு - மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான ரி.பி.வீரசூரிய தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட குழுவினரே இந்தச் சட்டத்தை ஆராய்ந்தனர்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஒமல்பே சோபித தேரர் சமர்ப்பித்த கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 46 மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாகவே, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் இந்தச் சட்ட மூலத்தை நேற்றுமுன்தினம் ஆராயந்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 46 மனுக்களில் 26 மனுக்கள் இந்தச் சட்ட அரசியல் யாப்புக்கு உட்பட்டதல்லவென்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும் அல்லது சர்வஜன வாக்கெடுப்பின்மூலம், அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று மனுக்களைத் தாக்கல் செய்துள்ள மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## சமாதான முயற்சிகளில் இந்தியாவை பங்களிக்க கோருகிறார் ரவூப் ஹக்கீம்



இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சியில் இந்தியாவின் பங்களிப்பை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதாக அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமாதான முயற்சிகளில் இந்தியா தனது பங்களிப்பை செலுத்த வேண்டுமென்பதில் நாம் மிகவும் விருப்பமுடையவர்களாக உள்ளோம். ஆனால், இந்த விடயத்தில் முடிவெடுப்பது இந்தியாவைப் பொறுத்தது.

இலங்கையின் நிலைமைகளில் இந்தியா எப்பொழுதும் நல்ல முன்னேற்றகரமான நிலைப்பாடுகளையே கொண்டுள்ளது. எமது பிரச்சினையில் விசேடமான அக்கறையை இந்தியா கொண்டுள்ளது.

ஆனால், கடந்த காலத்தில் துரதிஸ்டவசமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த விடயம் காரணமாக அது தயக்கம் காட்டுகிறது. இதனை நாமும் புரிந்து கொண்டுள்ளோம்.

டெல்கியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் இலங்கைக் கொள்கையில் இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் ஒரே மாதிரியாகவே இருக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியா சென்றுள்ள ஹக்கீம் வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்குடன் இலங் கையின் சமாதானப் பேச்சுவார்த்தையின் தற்போதையநிலை, பேச்சுவார்த்தையின்போது முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பங்களிப்பு உரியவகையில் வழங்கப்படுமென நட்வர் சிங், ஹக்கீமிடம் உறுதியளித்ததாகத் தெரியவருகிறது.

## மாற்று இடைக்கால நிர்வாக அலகு; ஜனாதிபதி சந்திரிகா தயாரிக்கின்றார்!



(கொழும்பு)

மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையைக் கவனத்திலெடுக்க வேண்டுமென்று, விடுதலைப் புலிகள் அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஒரு குழு, இது போன்ற இன்னுமொரு இடைக்கால நிர்வாக அலகைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் கையளித்த இடைக்கால நிர்வாக அலகை ஒத்த, ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட சில உரிமைகளை மட்டும் வழங்கும் பிறிதொரு இடைக்கால நிர்வாக சபைக்கான யோசனை அறிக்கையொன்றை, அவசர அவசரமாக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஆலோசனைக்குழு தயாரித்து வருவதாகவும் -

அந்த இடைக்கால நிர்வாக அலகின் கீழ் பேச்சு நடாத்தவே, அரசு இரகசிய முடிவுகளை எடுத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய பிறிதொரு இடைக்கால நிர்வாக அலகொன்றை அரசு தயாரித்து வருகிறதா என்று ஊடக அமைச்சர் மங்கள சமரவீர வைக் கேட்டபோது, அதை ஒத்துக் கொண்ட அமைச்சர் -

அரசு தயாரிக்கும் இந்த இடைக்கால நிர்வாக அலகு, வடக்கு - கிழக்குக்கான புனர்நிர்மாணப் பணிகளுக்கு முதலிடம் வழங்குவதுடன், நிரந்தரத் தீர்வு குறித்து அதிக கவனமெடுக்குமென்றும் தெரிவித்தார்.

## பிக்குவுக்கு 15 வருடச் சிறை

(கொழும்பு)

சிறுமி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட பௌத்த பிக்கு ஒருவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் 15 வருட கடூழியச் சிறைத்தண்டனையை நேற்றுமுன்தினம் விதித்தது.

சிறுவர் பள்ளி ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இதேவேளை - குற்றத்துக்காக, குற்றவாளியான பட்டதாரிப் பிக்கு 50 ஆயிரம் ரூபாவை பாதிக்கப்பட்ட சிறுமிக்கு வழங்கவேண்டும் அல்லது மேலும் 4 வருட சிறைத்தண்டனைக்கு உட்பட வேண்டியேற்படும் எனவும் நீதிபதி எச்சரித்தார்.

## கருணா குடும்பத்தினர் மலேசியா சென்றனர்?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் மனைவியும், அவருடைய பிள்ளைகளும் இந்தியா ஊடாக கடந்தவாரம் மலேசியா சென்றதாகக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மலேசியாவிலுள்ள முன்னாள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரான, செல்லையா இராஜதுரையின் உதவியுடனேயே இவர்கள் மலேசியா சென்றுள்ளதாகவும் அந்த ஊடக செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை, மட்டக்களப்பிலிருந்து கடந்த ஏப்ரல் மாதம் கொழும்புக்குத் தப்பிச் சென்ற கருணா, அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவின் உதவியுடன் கடந்த மாதம் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது

## சந்திரிகா – ரணில் சந்திப்பு விரைவில் நடைபெறும்!

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று விரைவில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்தச் சந்திப்பு எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் இடம்பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாக முன்னர் அறிவித்திருந்ததை அடிப்படையாகக் கொண்டே, இந்தச் சந்திப்பு இடம்பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா இராஜினாமாச் செய்து கொண்டதன் பின்னர், சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக அவர் அதிக அக்கறையுடன் செயற்படவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரசாங்கம் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்காவிட்டால, அது இலங்கையின் எதிர்காலத்துக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என பல தரப்புக்களும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க அணி வெற்றிபெற 325 ஓட்டங்கள் பெறவேண்டும்!



இலங்கை - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் காலியில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளான நேற்று இலங்கை அதன் இரண்டாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்ததன் மூலம் தென்னாபிரிக்க அணிக்கு வெற்றி இலக்காக 325 ஓட்டங்களை நிர்ணயித்துள்ளது.

முன்னதாக மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் 7 விக்கெட் இழப்பிற்கு 347 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்க அணி, நேற்றைய ஆட்டத்தில் 29 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 376 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் றுடோல்ப் 102 ஓட்டங்





களைப் பெற்றார். இது இவரது 15 டெஸ்ட் போட்டிகளின் நான்காவது சதமாகும்.

பந்துவீச்சில் முரளி 4, வாஸ் 2 , ஜெயசூர்யா 2, டில்ஷான் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பின்னர் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு தென்னாபிரிக்காவின் நிக்கி போஜி பந்துவீச்சில் அச்சுறுத்தலாக அமைந்தார். இதனால் இலங்கை வீரர்களில் ஜெயசூர்யாவைத் தவிர மற்றையவர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். இறுதியில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்துவதாக அறிவித்தது.

இலங்கை அணி சார்பில் ஜெயசூர்யா 74, அத்தப்பத்து 25, உபுல்சந்தன 29, சமரவீர களுவிதாரண இருவரும் தலா 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் நிக்கி போஜி 22 ஓவர்கள் பந்து வீசி 88 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்கள், பொலக், குளூஸ்னர் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்று மூன்று ஓவர்கள் மீதமிருக்கையில் களமிறங்கிய தென்னாபிரிக்கா விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் சிமித் 5, டிப்பென்னர் ஓட்டமெதுவும் இல்லாமலும் இருந்தனர்.



இன்று ஆட்டத்தின் இறுதி நாள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.


## கிரிக்கெட் சுற்றுப் போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் ரஞ்சன் ஞாபகார்த்த 6 வீரர்கள் பங்குபற்றும் 5 ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.நகரில் புகழ்பெற்ற கிரிக்கெட் மத்தியஸ்தராகத் திகழ்ந்த அமரர் சி.சுசேந்திரலிங்கம் (ரஞ்சன்) ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் சுற்றுப் போட்டிக்கு, யாழ்.மாவட்ட துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் ப.முருகவேள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (58)







மும்பையில் நடைபெற்ற கிரிக்கெட் விழா ஒன்றில் ராகுல் ராவிட் மராட்டிய தலைப்பாகையுடன் கலந்துகொண்டபோது....

# 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ். மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்டு வருகின்ற 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ்.மத்திய கல்லூரி அணிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிக்குமிடையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்தியகல்லூரி அணி இனிங்சால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 41 ஓவர்களில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 200 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுதித் கொண்டது. இதில் ஜேம்ஸ் ஜான்சன் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களையும், ஜெனோசன் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இனிங்ஸில் 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

யாழ். மத்தியகல்லூரி வீரன் மயூரன் 28 ஓட்டங்களைக் கொடுதது இரண்டு விக்கெட்டுக்களையும், தனுஜன் 10 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸில் ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டமையால் யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸாலும் 51 ஓட்டங்களாலும் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

யாழ். மத்தியகல்லூரி வீரர் சிவகரன், தனுசன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மயூரன், பிரதீபன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்த வருடம் 14 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டித் தொடரில் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும், சென்பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாத போட்டியாக முடிவடைந்தது.

ஏனைய போட்டிகள் யாவற்றிலும் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் நடைபெற்ற 14 வயதுப் பிரிவுப் போட்டித் தொடரிலும் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியன் அணியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (58)

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி; மானிப்பாய் அணி வெற்றி

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ஏற்பாட்டில் - யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் மானிப்பாய் பிரதேசசபை அணியும், நெடுந்தீவு பிரதேசசபை அணியும் மோதி - இறுதியில் மானிப்பாய் பிரதேசசபை அணி வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றுத் துடுப்பெடுத்தாடிய நெடுந்தீவு பிரதேசசபை அணி, 15 ஓவர்கள் முடிவில் - ஏழு விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கிய டொனேஸ் இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மானிப் பாய் பிரதேசசபை அணி வீரர் அகிலனின் துடிப்பான பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் நெடுந்தீவு பிரதேசசபை அணியினர் மள மளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தனர்.

எனினும், திவ்யபாலனும் ஏழாவதாகக் களமிறங்கிய சந்திரமோகனும் நிதானமாக ஆடி தமது அணியின் ஓட்ட எண்ணிக்கையை சற்று உயர்த்தினர். அந்த அணி சார்பாக திவ்யபாலன், சந்திரமோகன் ஆகியோர் முறையே 13, 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மானிப்பாய் அணி சார்பாக அகிலன் 4 விக்கெட்டுக்களையும், கமலகாந்த் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

66 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மானிப்பாய் பிரதேசசபை அணியினர் 13 ஆவது ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தனர்.

அந்த அணியின் சார்பாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக களமிறங்கிய அகிலன் 29 ஓட்டங்களையும், சிவசுதன் 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து வெற்றிப்பாதையில் தமது அணியை இட்டுச்சென்றனர்.

அத்துடன், மயூரன் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் யே.டெனேஷன் 2 விக்கெடடுக்களையும், திவ்யபாலன், லுசான், சந்திரமோகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை ம் கைப்பற்றினர். (100)





# உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக அணியை நல்லூர் பிரதேசசபை அணி வீழ்த்தியது!

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் ஏற்பாட்டில் - யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் - நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நல்லூர் பிரதேசசபை அணியும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அணியும் மோதி - இறுதியில் நல்லூர் பிரதேசசபை அணி வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற நல்லூர் பிரதேசசபை அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உள்ளூராடசி உதவி ஆணையாளர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

அந்த அணியின் சார்பாக பரமேஸ்வரன் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் சிவசுப்பிரமணியம் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தயாபாரன் மூன்று விக்கெட்டுக்களையும் ஐங்கரன், சுசீந்திரராஜா ஆகியோர் தலா 2 விக்கெடடுக்களையும் கைப்பற்றினர்.

70 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நல்லூர் பிரதேச சபை அணி - ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்தது.

மூன்றாவது துடுப்பாட்டக்காரராகக் களமிறங்கிய தயாபரன், மிகவும் நிதானமாகவும் அதிரடியாகவும் ஆடி, ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

அந்த அணியின் சார்பாக சிறிமோகன், பத்மரூபன் ஆகியோர் முறையே 12, 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

12 ஓவர்கள் முடிவில் நல்லூர் பிரதேசசபை அணி வெற்றி இலக்கை அடைந்தது. (100)

# ஐ.சி.சி. சம்பியன் போட்டிக்கான பாகிஸ்தான் அணி 10 ஆம் திகதி!

ஐ.சி.சி. சம்பியன் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி வரும் 10 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

இந்தப் போட்டிக்கான 14 பேர் கொண்ட வீரர்களை ஓகஸ்ட் மாதம் 2 ஆவது வாரத்துக்குள் தமக்கு அனுப்ப வேண்டும் என்று ஐ.சி.சி கட்டளையிட்டிருந்தது.

பாகிஸ்தான் ஏற்கனவே 30 பேர் கொண்ட தேர்வு அணியை ஐ.சி.சி இடம் அனுப்பிவிட்டது. இதில் சகல துறை ஆட்டக்காரர்கள் அசார் மெக்மூத், அப்ரிடி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். ஹொலண்டில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் 3 நாடுகள் போட்டியில் பாகிஸ்தான் பங்கேற்கிறது. இந்தப் போட்டிக்கான அணியும் 10 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

## மினி உலக கிண்ணப்போட்டி; இங்கிலாந்து அணி அறிவிப்பு!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டி செப்ரெம்பர் மாதம் 10 - 25 ஆம் திகதிவரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான அவுஸ்ரேலிய, இந்திய அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டன. இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. விக்ரம் சோலங்கி, கபீர் அலி ஆகியோர் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளனர். ஐ.சி.சி சம்பியன் கிண்ணப் போட்டிக்கான இங்கிலாந்து அணி வருமாறு.

வோகன் (கப்டன்), டிரெஸ் கோதிக், கபீர் அலி, பேட்டா, கோலிங் வூட், பிளின்ரொப், ஆஸ்லே ஜைல்ஸ், டரன் கவ், ஹார்மிசன், அண்டர்சன், ஜோன்ஸ், மெக்ரா, ஸ்டாரஸ், விக்ரம் சோலங்கி.

## இந்திய - பாகிஸ்தான் வீரர்கள் ஒரே அணியில் போட்டி!

இந்தியா - பாகிஸ்தான் வீரர்கள் ஒரே அணியில் இணைந்து உலக லெவன் அணியுடன் மோதும் ஆட்டம் - இங்கிலாந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடத்தப்படவுள்ளது.

மொத்தம் 4 ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டி இந்த ஆண்டு இறுதி அல்லது அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறும். இதற்கு ஐ.சி.சி இன்னும் அனுமதி அளிக்கவில்லை.

இந்தியா - பாகிஸ்தான் இணைந்த அணியில் டெண்டுல்கர், கங்கூலி, சொகைப் அக்தர் ஆகியோர் இடம் பெறுவார்கள். உலக லெவன் அணியில் ரிக்கி பொண்டிங், அடம் கில்கிறிஸ்ட் பங்கேற்கவுள்ளனர்.

## தாச்சிச் சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் மாபெரும் தாச்சிச்சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 5 மணிக்கு சுதுமலை நாவலர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் -

சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இணுவில் அணணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

குடாநாட்டில் வெடிபொருட்களை அகற்ற

# ஒன்பது மோப்ப நாய்கள் அடுத்த வாரம் முதல் பணியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை அகற்ற, அடுத்த வாரம் முதல் ஒன்பது மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட வெடிபொருட்கள் அகற்றும் மோப்ப நாய்களைக் கொண்டு இராணுவ வெடிபொருட்கள் அகற்றும் பிரிவினர் வெடிபொருட்கள் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

வடக்கு - கிழக்கிலுள்ள வெடிபொருட்கள் புதைக்கப்பட்ட பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரம் முதல் இந்த மோப்ப நாய்கள்- வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன. முதலில் அரியாலைப் பகுதியிலேயே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தொடர்ந்து அவற்றின் மூலம் கிடைக்கும் பயனைக் கொண்டு விரைவான சேவை மூலம் யாழ்.மாவட்டம் முழுவதும் இந்த மோப்ப நாய்களைக் கொண்டு வெடிபொருட்கள் அகற்றப்படவுள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டலுவலகம் தெரிவித்தது. (ப)



யாழ். அடைக்கல அன்னை முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் வருடாந்த விளையாட்டு விழாவில் பங்குத்தந்தை இ.ம.பயஸ் அடிகள், அருட்பணி தயாபரன், அருட்திரு ரவிராஜ் அடிகள் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

யாழ். நகர சூட்டுச்சம்பவ வழக்கை

# மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மாற்றும் முயற்சிக்கு எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் இடம்பெற்ற சூட்டுச்சம்பவ வழக்கை, மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு மாற்ற எடுக்கும் முயற்சிக்குப் பாதிக்கப்பட்டோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

யாழ். நகரப்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த ஒருவரும், மினிபஸ் நடத்துநர் ஒருவரும் - இராணுவச் சிப்பாய் ஒருவரால் சுட்டுக் காயப்படுத்தப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை - யாழ். நீதிமன்றில் நடைபெற்று வந்தபோதும், சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவச் சிப்பாய் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, கொழும்பு மேல்நீதிமன்றுக்கு இந்த வழக்கை மாற்ற முயற்சித்து வருகின்றார்.

இதன்மூலம், யாழ்ப்பாணத்தில் உள்ள பாதிக்கப்பட்டவர்கள் கொழும்புக்குச் சென்று, வழக்கில் சாட்சியமளிப்பது கடினமான காரியமாகும் என இவர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, சட்டத்தரணி ஒருவரும், சிறுவர் நலன்பேண் அமைப்பின் பிரதிநிதி ஒருவரும் கொழும்பு மேல்நீதிமன்றுக்குச் சமூகமளித்து, இந்த வழக்கை மீண்டும் யாழ்ப்பாணத்துக்கே மாற்றக் கோரவுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ப)

## தீக்காயங்களுக்கு உள்ளானவர் இரு தினங்களின் பின் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் - சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த 38 வயதான விக்டர் ஜெயசீலன் என்பவரே தீக்காயங்களால் உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த புதன்கிழமை இவர் தவறுதலாக ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இவர் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு இரண்டு தினங்களுக்குப் பின் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

மரணமடைந்தவரின் உடல் வைத்தியப் பரிசோதனைகளின் பின்னர் அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : மு.ஐஸ்வினி
முகவரி : ஞானவைரவர் கோயிலடி, இணுவில்.

முதலாவது அகவையில்



பெயர் : சி.பிரித்திகா
முகவரி : வேதவுடையார் வளவு, மல்லாகம்.

இரண்டாவது அகவையில்



பெயர் : ந.கிருத்திகா
முகவரி : பெரியதம்பிரான் கோயிலடி, வண்ணார்பண்ணை

நாலாவது அகவையில்



பெயர் : ர.நிகேஷ்
முகவரி : 13 ம் வட்டாரம், நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :----------
முகவரி :----------
பிறந்த ஆண்டு:----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்


## வேளாண் நூல் அறிமுகவிழா

விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரையின் வேளாண் நூல் அறிமுக விழா, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், அறிமுக உரையைப் பேராசிரியர் எஸ்.மோகனதாஸும், வாழ்த்துரையை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் நிகழ்த்தவுள்ளனர்.

# பொதுநூலகங்களின் விபரங்களை உடன் அனுப்பி வைக்க கோரிக்கை

## உள்ளூராட்சி ஆணையாளர் உத்தரவு

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபையின் கீழ் இயங்கும் நூலகங்களின் முழு விபரங்களையும் உடன் அனுப்பிவைக்குமாறு, யாழ். மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா யாழ்.குடாநாட்டு சகல உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

சபையினால் நடத்தப்படும் நூலகங்கள், முன்பள்ளி நூலகங்கள், உள்ளூராட்சி மன்றத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட ஆளணிகளின் எண்ணிக்கை, வெற்றிடமாகவுள்ள ஆளணிகளின் எண்ணிக்கை, நூலகர், உதவி நூலகர், நூலக சேவகர், நூலகத் தொழிலாளி போனறவர்களின் விபரம் மற்றும் கட்டட அமைப்புக்களின் விபரம் அடங்கிய கொத்துப் படிவங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் சகல பிரதேசசபைகளின் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே, குறிப்பிட்ட படிவத்தினை உடன் நிரப்பி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

# ஐந்து கிராமங்களுக்கு பொது நோக்கு மண்டபங்கள்

கரித்தாஸ் நிறுவன உதவியுடன் தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள 5 கிராம அலுவலர் பிரிவுகளில், பொதுநோக்கு மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைதடி, நாவற்குழி, கரம்பைக்குறிச்சி, கொடிகாமம் தெற்கு, சங்கத்தானை, சரசாலை தெற்கு ஆகிய 5 கிராம அலுவலர் பிரிவுகளில் அமைக்கப்படவுள்ள இந்தப் பொது நோக்கு மண்டபங்கள் - அமையவிருக்கும் காணிகளின் விபரத்தைக் கிராம அலுவலர்கள் பிரதேச செயலரின் சிபார்சுடன் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கான அங்கீகாரம் அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளது. (24)

## சமுர்த்தி வங்கிக் கடன்

பருத்தித்துறை சமுர்த்தி வங்கிச் சங்க வலயம் I இனால் இதுவரை 130 பேருக்கு சுமார் 12 லட்சத்து 15 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனில் - சுயதொழில் கடனாக, 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படுகிறது.

5 ஆயிரம் ரூபா கடன் பெறுவதாயின், 500 ரூபா பெறுமதியான பங்கையும், 10 ஆயிரம் ரூபா கடன் பெறுவதாயின், 800 ரூபா பெறுமதியான இரண்டு பங்குகளையும் பயனாளிகள் கொள்வனவு செய்திருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (15)

## வீதி புனரமைப்பு

அம்பன் பிரதான வீதியாகிய பருத்தித்துறை, தாளையடி வீதியில் உள்ள அம்பன் பாடசாலையில் இருந்து மருத்துவமனை வரையிலான ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றன.

குன்றும் குழியுமாக இருந்த இந்த வீதியை இதுவரை காலமும் எந்த அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் செய்ய முன்வராத நிலையில், தற்போது ஒரு வாரகாலமாக அந்தப் பகுதி இராணுவத்தினரால் இந்த வீதி - புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மழைகாலங்களில் இந்த வீதியிலுள்ள சேற்றில் வாகனங்கள் புதைவதும் குறிப்பிடத்தக்கது. (20)

பாடசாலைக்கு முன்பாக போக்குவரத்தில்

# கண்காணிப்பில் ஈடுபட்ட மாணவி மோட்டார் சைக்கிள் மோதி காயம்

(யாழ்ப்பாணம்)

திருக்குடும்ப கன்னியர் மடம் முன்பாக, பொலிஸாருக்கு உதவியாக வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவி- மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மடத்தடிப் பகுதியில் இடம்பெற்றது.

17 வயதான ஜெயராஜ் கயனி என்ற மாணவியே காயமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

இந்த வீதியில், வீதிப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் - வீதி ஒழுங்கினைப் பேணாது, வேகமாக வந்த நபர் ஒருவர் இந்த மாணவி மீது மோதினார்.

இவரை அங்கு கடமையில் நின்ற பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

காயமடைந்த மாணவி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (தீ)

# புதிய வாக்காளர் பதிவு 15 ஆம் திகதி ஆரம்பம்

## உதவி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் வாக்காளர் இடாப்புப் பதியும் பணிகள் ஆரம்பமாகுமென, யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது -

யாழ்ப்பாண மாவட்டத்தில் வதியும் 18 வயதுக்கு மேற்பட்ட - வாக்காளர் இடாப்பில் பதியப்படாதவர்கள் அனைவரையும் பதியும் நடவடிக்கை, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கிராமசேவையாளர்களினூடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான படிவங்கள் - பிரதேச செயலகங்களுக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளது. அவர்களினூடாகக் கிராம சேவையாளர்களுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு, பின் கிராம சேவையாளர்களால் பதிவு செய்யப்படாதவர்கள் வாக்காளர் இடாப்புப் பதிவுக்கு உட்படுத்தப்படுவர்.

அவ்வாறு பதிவு செய்யப்படும் விண்ணப்பப்படிவங்களை கிராம சேவையாளர்கள் - பிரதேச செயலகங்களுக்கு வழங்கி, அவை எமக்கு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

இவ்வாறு பதிவு செய்யப்படும் வாக்காளர்களைப் பட்டியலிடும் நடவடிக்கை, அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டு, அதன்படி வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## வீதிக்குறியீடுகள் போடப்பட்டுள்ளது

தும்பளை இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் கோயில் தொண்டர் சபையினரின் வேண்டு கோளுக்கிணங்க, கற்கோவளம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு முன்பாக பாடசாலைக் குறியீட்டுக் கம்பமும், வீதியைக் கடக்கும் மஞ்சள் கடவையும் நெல்லியடி - வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அண்மையில் போடப்பட்டுள்ளது.

# விளையாட்டு அரங்கம்



## கதைத்துப் பேசியே கவிழ்த்தவர்கள்



சனத்
"மின்னலாய் பளிச்சிடு"

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரேமதாச விளையாட்டரங்கில் இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையே இடம்பெற்ற ஆசியக் கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய அணியை வீழ்த்தி மூன்றாம் தடவையாக ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இலங்கை அணி வீரர்கள் - ஆசியாவின் கிரிக்கெட் ஜாம்பவான்கள் தாங்களென நிருபித்துள்ளனர்.

நாமே வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் என வாய்வீரம் காட்டிய கங்கூலி - கிண்ணத்தை வெல்லாது சோகத்துடன் நாடு திரும்பியுள்ளார்.

சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும், பந்து வீச்சாளர்களையும் கொண்ட இந்திய அணி - இலங்கையுடனான போட்டியில் வெறும் 228 ஓட்டங்களைப் பெறமுடியாமல் கிண்ணத்தை கோட்டை விட்டதன் காரணம், இந்திய அணியின் பலவீனம் என்று சொல்வதைவிட, இலங்கை அணி வீரர்களின் மனத்திடமும், இலங்கை அணியின் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்புமே காரணம் என்றால் மிகையாகாது.

இலங்கைஅணி வீரர்களைப் பொறுத்தவரையில் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களை எடுக்கவிடாது நெருக்குதலுக்கு உள்ளாக்கி, பின்னர் ஓட்ட வீதம் அதிகரித்துச் செல்லும்போது, அவர்களை வீழ்த்தும் முறைமையைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார்கள்.

228 என்ற இலக்கு-இந்திய அணியைப் பொறுத்த வரையில் சுலபமானது என உணர்ந்த அத்தப்பத்து - தனது அணியின் பந்து வீச்சையும், களத்தடுப்பையும் மிகத்திறமையாகப் பயன்படுத்தி, இந்திய அணிக்குப் பாரியதொரு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சாளருக்கு முகம் கொடுத்து, ஓட்டங்களைப் பெறமுடியாது இந்திய அணியினர் முடக்கப்பட்டனர்.

இங்கு சனத், சொய்ஸா, சந்தன, டில்ஷான், வாஸ் ஆகியோரது பந்துவீச்சுக்கள் மிகத்திறமையாக அமைந்தன. உண்மையில் சனத் தனது அனுபவத்தை இந்தப் போட்டியில் வெளிப்படுத்தியிருந்தார் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

அதேநேரம், மஹேலவினதும், டில்ஷானினதும் மிகவும் அதிஅற்புதமான பிடிகளே இந்தப் போட்டியின் திருப்புமுனையாக அமைந்தன. அதேநேரம், இலங்கை அணியின் அனைத்து வீரர்களும் மிகவும் பொறுப்புணர்வோடு அணியின் வெற்றிக்காக உழைத்தமை பாராட்டுதற்குரியதே.

துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரையில், இலங்கை அணி சோபிக்காதபோது, ஒருகட்டத்தில் நிலை தடுமாறிய இலங்கை அணியைத் தூக்கி நிறுத்தி, வெற்றிச் சிகரம் வரை அழைத்துச் சென்ற அத்தப்பத்துவும், அவரோடு தோள்கொடுத்த சங்ககாரவும் பொறுப்புணர்ந்து செயற்பட்டார்கள் என்றால் அது மறுப்பதற்கில்லை.

இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிடவேண்டும். இலங்கை அணியின் தற்போதைய தலைவர் அத்தப்பத்து - முன்னாள் அணித்தலைவர் சனத்துடன் கலந்தாலோசித்து, அணியை வழிநடத்தியமை மிகவும் சிறப்பான விடயமாகும். என்னதான் இருப்பினும் தனது ரசிகர்களைத் திருப்திப்படுத்திவிட்டது இலங்கை அணி.



"இது நல்ல பொருத்தம்"

- லெஸ்லி

## பதுங்காமல் பாய்ந்தே இருக்கலாம்



கங்கூலி
"விதியை மாற்றுவேன்"

பொதுவாகவே ஆசிய நாட்டு கிரிக்கெட் வீரர்களிடம் உள்ள ஒரு குணம் முக்கியமான போட்டிகளில் வெற்றி இலக்கு குறைவாக இருந்தால் தங்களுடைய இயல்பான ஆட்டப்பாணியை மாற்றி நிதானமான முறையில் துடுப்பெடுத்தாடுவதென்றால் அதில் மிகையில்லை. அது சிலவேளைகளில் எதிர்பாராத முடிவுகளையும் ஏற்படுத்திவிடும். அதிலும் ஓரிரண்டு விக்கெட்டுக்கள் விரைவிலேயே வீழ்த்தப்பட்டால், சொல்லத் தேவையிலலை, வீரர்கள் , ஒரு நாள் போட்டி என்பதை மறந்து டெஸ்ட் ஆட்டத்தில் இறங்கி விடுவார்கள்

ஆனால், இந்த விடயத்தில் அவுஸ்ரேலிய வீரர்களை எடுத்துக் கொண்டால் எவ்வளவு விரைவில் ஆட்டத்தை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவில் முடித்து விடுவார்கள். அது ஆரம்ப வீரர்களாக இருந்தாலும் சரி, மத்திய வரிசை வீரர்களாக இருந்தாலும் சரி.

சென்ற வருடம் இந்தியாவில் நடைபெற்ற TVS கிண்ண, அவுஸ்ரேலியாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் இந்திய அணி 235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி, இறுதியில் 29 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

அந்த வேளையில், இந்தத் தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்த அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ்வோ-

இந்திய வீரர்கள் துடுப்பாட்டத்தை ஆரம்பிக்கும் முன்னதாகவே இந்தப் போட்டியில் 50 ஓவர்களும் களத்தில் நிலைத்து நின்று ஆடவேண்டும், அப்போது தான் வெல்லமுடியும் என்ற ஒரு கட்டுப்பாட்டை தங்களுக்குள் உருவாக்கிக் கொண்டார்கள். அந்தத் தவறுதான் ஆட்டத்தை அவுஸ்ரேலியாவுக்குச் சாதகமாகத் திருப்பிவிட்டது.

அன்றைய தினம், பந்துவீச்சாளர்களைக் கட்டுப்படுத்தும் திறமை படைத்த சச்சின் நிதானமான ஆட்டத்துக்குப் பதிலாக தனது வழக்கமான தாக்குதல் பாணி ஆட்டத்தை வெளிப்படுத்தி சுமார் 75 ஓட்டங்களையாவது குவித்திருந்தால், முடிவு வேறு மாதிரியாக அமைந்திருக்கும், என்று கூறியிருந்தார்.

அன்று அவர் சொன்ன அதே தவறைத்தான் நடந்து முடிந்த ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியிலும், இந்திய அணியினர் செய்திருந்தனர்.

பகலிரவு ஆட்டங்களில் நேரம் செல்லச் செல்ல ஆடுகளத்தின் தன்மை மாற்றம் அடைந்து, ஓட்டங்களைக் குவிப்பதில் சிரமம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

எனவே, முதல் 15 ஓவர்களில் விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டாலும், ஓட்டங்களைக் குவிப்பது விரும்பியோ, விரும்பாமலோ அத்தியாவசியமானது.

இந்தப் போட்டியில் முதல் 15 ஓவர்களைப் பயன்படுத்த இந்திய அணியினர் தவறிவிட்டனர். ஏனென்றால், அவர்களால் 50 ஓட்டங்களைக் கூட இதில் பெறமுடியவில்லை. ஏழு துடுப்பாட்ட வீரர்கள் இருந்தும் ஒட்டு மொத்த இந்திய ரசிகர்களினதும் எதிர்பார்ப்பும் டெண்டுல்கர் தோள்களில் அழுத்த, நிதானமாக ஆரம்பித்து படிப்படியாக விஸ்வருபம் எடுத்தார். பொறுத்த போட்டிகளில் காலை வாருபவர் என்ற குற்றச்சாட்டைப் பொய்ப்பித்து பொறுப்புடன் ஆடிய போதும், பொறுத்த நேரத்தில் துரதிஷ்டவசமாக ஆட்டமிழக்க, தோல்வி உறுதியானது.

1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து ஆரம்பித்த இறுதிப் போட்டியில் தோற்கும் படலம் 2002ஆம் ஆண்டு நட்வெஸ்ட் தொடரில் முடிவுக்கு வந்து, மீண்டும் உலக்கிண்ண போட்டிகளிலிருந்து ஆரம்பித்து ஆசியக் கிண்ணம் வரை தொடர்கின்றது. இந்த நிலைக்கு இந்த மாதம் ஹொலண்டில் நடைபெறும் தொடரிலாவது மறுபடியும் முற்றுப்புள்ளி வருமா?



இந்திய ரசிகை
"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்"

-விமலன்

## போட்டு உடைக்காதீர்கள்



சங்ககார
"அமைதியாக மாறுக"

ஆசியக் கிண்ணம் இலங்கைக்கு மகிழ்ச்சியாக முடிந்தாலும், இறுதிப் போட்டியில் இலங்கை வீரர்கள் சிலர் நடந்து கொண்ட முறை மகிழ்ச்சியாக இல்லை. அதுவும் மூன்றுபேர் - உபுல் சந்தன, குமார் சங்ககார, டில்ஷான் மூவரும் மைதானத்தில் நடந்துகொண்ட முறைபற்றி டேவிட்ஷெப்பட், பிலி போடன் இருவருமே புகார் செய்துள்ளார்கள். அதே வேளை, இவர்களது குறிப்பிட்டளவு கொடுப்பனவும் தண்டப்பணமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

இதில் என்ன விடயமென்றால் இலங்கை அணியின் நற்பெயருக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள் சனத், அத்தப்பத்து, முரளி போன்றோர்தான். ஆசியக் கிண்ணத்தை வென்றபின்கூட அத்தப்பத்துவின் அமைதி குலையவில்லை. நிதானம் தளரவில்லை. சனத்தைப் பற்றிக் கூறவே தேவையில்லை. ரவிசாஸ்திரி பேட்டிகண்டபோது குழந்தையாகவே மாறிவிட்டார். ஆனால், மேற்கண்ட மூவரும் அணிக்குத் திருஷ்டி பரிகாரம் போல நடந்து கொண்டமை கிரிக்கெட் ரசிகர்களைப் பெரிதும் கவலையடையச் செய்துவிட்டது. உலகின் முதற்தர அணியாக அவுஸ்ரேலியாவை ரசிகர்கள் ஏற்றுக் கொண்டாலும், அவர்களது மைதான நடத்தை ரசிகர்களால் பெரிதும் வெறுக்கப்படுகிறது. இலங்கை அணி தனது நாகரிக நடத்தைக்கும் மெச்சப்பட்ட அணி. ஆனால், அதனை உணர்ச்சி வசத்தால் கொச்சைப்படுத்தக் கூடாது. அணியின் தலைவருக்கும், சனத்துக்கும் அணியை வெற்றிப் பாதைக்கு கொண்டுபோகும் பணியைவிட மேலதிக பணியும் இருப்பதாகக் காணப்படுகின்றது.



டில்ஷான்
"அரிவாளா கையில்"

-ஜெயா

# ஜூலை மலர்களே ஜூலை மலர்களே

தமிழீழத் தேசிய இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று கிளிநொச்சியில் வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடைபெற்ற இந்தப் போட்டிகள் 14வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு, 20 வயதுப் பிரிவு, மகளிர் அணிஎன்றவாறாக நடைபெற்றது.

2003 ஆம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றுப் போட்டி, இந்த வருடம் நடைபெற்று முடிவடைந்த நிலையில், இனிவரும் போட்டிகள் இன்னும் விறுவிறுப்புடன் நடைபெற ஏற்பாடுகள் இருப்பதை அறிந்து கொள்ளமுடிந்தது. 2003,2004


14 வயதுப் பிரிவு சம்பியன் அணி
-அருணோதயாக் கல்லூரி-


20 வயதுப் பிரிவு - யாழ் தெரிவு அணி

இரண்டு வருடங்களிலும் புலம்பெயர் வீரர்கள் அடங்கிய சுவிட்சர்லாந்து அணிகள் பங்குபற்றியுள்ளன. இனிவரும் காலங்களில் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் பல்வேறு நாடுகளிலிலிருந்தும் உதைபந்தாட்ட அணிகள் பங்கு கொள்வதற்கான ஏற்பாடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிந்தது.

இந்தச் சுற்றுப் போட்டியின் முக்கியத்துவம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை என்றாலும், சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அம்சங்கள் இரண்டு. ஒன்று 14 வயதுக்குட்பட்ட இளையோர் அணி பங்குபற்றியமை.

மற்றையது மகளிர் அணி களத்தில் இறங்கியமை. எதிர் காலத்தின் உதைபந்தாட்ட வளர்ச்சியின் சரியான நாற்றுகள் 14 வயதுப் பிள்ளைகள். இவர்களுக்குச் சரியான களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பது மிகுந்த பாராட்டுக்குரிய நடைமுறையாகவே காணப்படுகிறது.

விசேடமாக இந்தப் பணி வெற்றிகரமாகத் தொடரப்போகிறது என்பதே எதிர்காலம் பற்றிய சரியான சிந்தனையின் ஆரோக்கியமான வெளிப்பாடாகக் காணப்படுகின்றது.

ஏற்பாட்டாளர்களின் தூர நோக்கு பெரும் பாராட்டுக்குரியது.

- ஜோஸப் கிருஸ்ணா -

# மேற்கில் தோன்றும் உதயந்தானா?


சர்வான் "பாவம் புதியதலைமுறை"

விவியன் றிச்சட்ஸ், கிளைவ்லொயிட், கொட்னி வோல்ஷ் அம்புறோஸ் போன்ற மிக உன்னத வீரர்கள் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியா தற்போது இந்த நிலைக்குச் சென்றுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்வது கடினமாகத்தான் உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் இந்த வீழ்ச்சிக்கு என்ன காரணம், எங்கே பிழை நடந்தது, ஏன் இப்படி ஆனார்கள் என்ற கேள்விகளுக்கான விடைகள் புரியாத புதிராகவே தொடர்ந்தும் உள்ளது.

அண்மையில் வோகன் தலைமையில் மேற்கிந்தியத் தீவுகள் சென்ற இங்கிலாந்து அணி கடந்த 38 வருடங்களாக டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் பெறமுடியாத வெற்றியை உலக சாதனை வீரரான பிரைன் லாரா தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணியை 3-0 என்ற நிலையில் வெற்றி கொண்டதும் இங்கு கவனிக்கத்தக்கது.

இதே இங்கிலாந்து அணியுடனேயே நான் 400 ஓட்டங்களைக் குவிப்பேன் என்று கூறிய லாரா அதனைச் செய்து முடித்ததும், தான் வாய்ச்சொல்லில் வீரரல்ல செயலில் செய்து காட்டுபவன் என்பதையும் நிரூபித்தார்.

இந்த நிலையில் பங்களாதேஷ்அணி மேற்கிந்தியத் தீவுகள் சென்று இரண்டு டெஸ்ட் தொடரை விளையாடியவேளை முதலாவது போட்டி சமநிலையில் முடிவடைய - இரண்டாவது போட்டியை வெல்வேன், இல்லையேல் தலைமைப் பதவியைத் துறப்பேன் என்று கூறி வென்று காட்டியவர் லாரா.

இதன்பின் தற்போது இங்கிலாந்து சென்று விளையாடிவரும் லாரா தலைமையிலான மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒருநாள் தொடரில் இங்கிலாந்தை வென்று இறுதிப் போட்டியில் நியூஸிலாந்துடன் மோதியபோதும் தோற்றது.

இதன்பின் தற்போது இங்கிலாந்துடனான 4 டெஸ்ட் கொண்ட தொடரில் இரண்டை இழந்து நிற்கிறது மேற்கிந்தியத் தீவுகள் அணி.


லாரா "எத்தனை வருடங்கள் உழைப்பது"

இதில் இங்கிலாந்தை வென்ற லாரா இங்கிலாந்திலிருந்தே தமது அணியின் புத்தெழுச்சி தொடங்கப்படுமெனத் தெரிவித்தார். ஆனால், தற்போது நடந்து கொண்டிருப்பதென்ன?


உலகிலேயே சிறந்த துடுப்பாட்ட வீரர்களான லாரா, சர்வான், சந்தர்போல், கைல் போன்றவர்கள் இருந்தும் அணியின் வீழ்ச்சியைத் தடுத்துநிறுத்த முடியாமல் உள்ளதற்குக் காரணம் யாது?

இவ்வாறு அணி வீழ்ச்சிப் போக்கில் செல்கையில் அந்த அணியின் முன்னாள் வீரர்கள் ஏன் தமது ஆலோசனைகளை வழங்க முன்வரவில்லை? ஏன் அணியைப் பற்றியதான மறு மதிப்பீட்டைச் செய்யவில்லையென்ற கேள்வியும் எழவே செய்கின்றது.

துயரம் என்னவெனில் அசைக்க முடியாத அணியாக ஒரு காலத்தில் திகழ்ந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி வளர்ந்துவரும் பங்களாதேஷ் அணியுடன் வெல்வோம் என்று சவால்விடும் அளவுக்குக் கீழிறங்கியதுதான்.

-யசோ

# ஊசிப்பதே எங்கள் வேலையா?


ஹிக்கம் எல்குரோஜ் (1500 m) "ஆபிரிக்கத் தங்கம்"

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டி பற்றி எழுதும் போது மொறிஸ் கிறீனின் பெயரோடு ஆரம்பித்தாலும் அவருக்கு முன்னால் வேறு யாரோ வந்து நிற்கிறார்கள் - இந்த முறை அஸாபா பவல். ஜமெய்க்கா நாட்டைச் சேர்ந்த இவர், லண்டன் கிரோண் பிரி தடகளப் போட்டிகளில் ஒலிம்பிக் சாம்பியன் மொறிஸ் கிறீனை தோற்கடித்துள்ளார். 100 மீற்றர் ஓட்டத்தை பத்து செக்கனுக்குள் ஓடி முடிப்பேன் என்பது கிறீனின் சபதம். அதனை அவர் நிறைவேற்றினார். அதாவது 9.97 செக்கனில் ஓடி முடித்தார். ஆனால் அதனைவிட அபாரமாக 9.91 செக்கனில் 100 மீற்றரைப் பாய்ந்து கடந்தார் அஸாபா பவல். ஆனால் இதேவேளை உலகச் சம்பியன் கிம்கொலின்ஸ் ஐந்தாவது இடத்தையே பெறமுடிந்தது. கிறீன் வெற்றி பெற்ற பவலைப் பாராட்டினாலும், இந்தத் தோல்வி எனது தன்னம்பிக்கையைக் குலைக்காது. இங்கு நடப்பதெல்லாம் பெரிய விடயமல்ல. ஏதென்ஸில் நடப்பது தான் பெரிய விடயம் என்கிறார் அவர். இதேவேளை, பிரித்தானியாவின் ஒலிம்பிக் எதிர்பார்ப்புக்களான மார்க்லூயிஸ் பிரான்சிஸ், டரன் கம்பெல், ஜேசன் காடினர் ஆகியோரும் தோல்வியையே தழுவி உள்ளனர்.


இன்னொரு புறம் எதியோப்பியாவைச் சேர்ந்த ஹெய்ல் ஜெபர் செலாசி எதிர்பார்க்கப்பட்டது போலவே1500 மீற்றரை தன் வசமாக்கிக் கொண்டார். 1500 மீற்றர் மகளிர் ஓட்டத்தில் பிரித்தானியாவின் கெலி ஹோம்ஸ் 4.04 செக்கனில் வென்று கொண்டார். இவர் ஏதென்ஸில் தங்கம் வெல்வார் என்று எதிர் பார்க்கப்படுபவர்.

மற்றொரு தடகளப் போட்டியான கிரோண் பிரி II பெல்ஜியத்தில் நடைபெற்றது.

இங்கு இன்னுமொரு 1500 மீற்றர் ஜாம்பவான் தன் கொடியை நாட்டி இருக்கிறார். மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த ஹிக்கம் எல் குரோஜ் தனது வெறறிக் கொடியை நாட்டி இருக்கிறார்.

இவரும் ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான நல்லதொரு பயிற்சியே இது என்கிறார். மேலும் முன்னதாக 3 நிமிடம் 30 செக்கனில் ஓடி வெற்றி பெற்ற இவர், பெல்ஜியத்தில் 3 நிமிடம் 29 செக்கனில் ஓடி முடித்திருக்கிறார். இந்த நிமிடத்தில் யார் யார் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை யாருமே தீர்மானிக்க முடியாது போலத்தான் இருக்கிறது.

- மரியா -


அஸாபா பவல் (100 m) "தங்கமே தங்கம்"

# வவுனியாவில் அதிக அளவில் கள்ளநோட்டுக்கள் புழக்கத்தில்

## மக்களை விழிப்பாக இருக்குமாறு வங்கியாளர் கோரிக்கை

வவுனியாவில் அதிகளவில் கள்ளநோட்டுக்கள் புழக்கத்தில இருப்பதாகவும், அதனால் பாவனையாளர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் வங்கியாளர்கள் கேட்டுள்ளனர்.

வவுனியா நகர் மற்றும் புறநகர்ப் பகுதியிலேயே இவ்வாறு அதிகளவான கள்ளநோட்டுக்கள் புழக்கத்தில் உள்ளன. 1000 ரூபா, 100 ரூபா போன்ற நோட்டுக்களில் தற்போது அதிகளவில் கள்ளநோட்டுக்களாக இருப்பதாகவும், இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரணமாக பார்த்தால், எந்த விதமான மாறுதல்களும் தெரியாத இந்த நோட்டுக்கள் - தண்ணீர் படுகின்றபோது, நிறம் மாறுவதாகவும், அத்துடன் நோட்டில் இருக்கின்ற சிங்களமொழி தெரியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அதிகளவான பணம் வங்கிகளுக்கு மாற்ற வருவதாகவும், அவ்வாறு வரும் [illegible]நோட்டுக்களை தாங்கள் ஓட்டைபோட்டு திருப்பி அனுப்புவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகர்ப்பகுதியிலுள்ள எரிபொருட்கள் நிரப்பும் நிலையம் ஒன்றுக்கு மட்டும் - மிக குறுகிய நாட்களில் 15 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்கள் வந்துள்ளது.

இதனால் வவுனியா வாழ் மக்களும், வெளியிடங்களிலிருந்து வருபவர்களும் இதில் அவதானமாக இருக்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

## புதுக்குடியிருப்பில் இலவச கணினிப் பயிற்சிநெறி

(புதுக்குடியிருப்பு)

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய பரிபாலன சபையின் நிதி உதவியுடன், தமிழீழ மாணவர் அமைப்பு மற்றும் தமிழீழ தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலும், இன்று காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அலுவலகத்திலுள்ள கணினிப் பயிற்சி மையத்தில், இலவச கணினிப்பயிற்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த விழாவுக்கு ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.




## தென்னிலங்கை சமூகப் பிரமுகர்கள் மனித உரிமை அலுவலகத்துக்கு விஜயம்


(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு விஜயம் செய்த குமார் ரூபசிங்க தலைமையிலான வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் வட- கிழக்கு மனித உரிமைகள் செயலக நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வண.கருணாரட்ணம் அடிகள் - மனித உரிமைகள் செயலக உருவாக்கம் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக, இவர்களுக்கு நீண்ட விளக்கமளித்தார்.

மேலும் வட-கிழக்கில் கடந்த காலங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தெற்கிலுள்ள மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எனவும், அதற்கான வழிவகைகளை வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஊடாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தென்னிலங்கைப் பிரமுகர் கேட்டுக்கொண்டார்.

தெற்கில் பல பெண்கள் அமைப்புக்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனத் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கொண்ட குழுவினர் இந்த செயலகத்தின் உருவாக்கத்தை வரவேற்றதுடன், கடந்த காலங்களில் நடந்த மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதுடன், தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.



தென்னிலங்கைப் பிரமுகர்களுக்கு வண.கருணாரட்ணம் அடிகளார் நிலையத்தில் செயற்பாடுகளை விளக்குகிறார்.

# எமது எதிர்கால சந்ததியினருக்கு அழியாத சொத்தை வழங்கவேண்டும்

## மன்னார் அரசியல் பொறுப்பாளர் இனியவன் தெரிவிப்பு

(மன்னார்)

கடந்த 30 வருடங்களாக தமிழினம் பெருமளவு சொத்துக்களை இழந்தது. இனியும் அந்த நிலையைத் தொடரவிடாது, எமது எதிர்கால சந்ததிக்கு அழியாத சொத்தை தாம் வழங்க வேண்டும். அதுதான் கல்விச் செல்வம். அதையே எமது தேசியத் தலைவரும் வலியுறுத்தி வருகின்றார்.

இவ்வாறு மன்னார் மாவட்ட புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் கலைமாணி பட்டக்கற்கை நெறி அங்குரார்ப்பண வைபவத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எமது மக்கள் உயர்கல்வியைப் பெற, தொலைவிடங்களை நோக்கி சென்ற நிலை இன்று மாறிவருகின்றது.

தமிழ் மக்களாகிய நாம் - துன்பத்தைக் கண்டு துவண்டு விடக்கூடாது. இடையூகளைப் பார்த்து கலங்கி விடக்கூடாது. கல்வி கற்றலைக் கைவிட்டு விடக்கூடாது.

கல்வியில் நாம் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டும். கல்வியின் உதவியாளர் எந்த விடயத்திலும் எம்மால் முன்னோக்கிச் செல்ல இயலும். கல்விக்குறைபாட்டால் பலர் அரியசந்தர்ப்பங்களை இழந்துள்ளனர்.

எனவே, உள்ள வளத்தைக் கொணடு, கல்வி வளத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் ஆசிரியர்களும் கவனம் செலுத்தவேண்டிய தேவை ஒன்று உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.


**ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது படையினரால் அழிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பிள்ளையார் தேரினைப் படத்தில் காணலாம்.**

**இந்தத் தேர் திருப்பணிக்காக யாழ். மாவட்டத்திலிருந்து 5 லட்சம் ரூபா சேகரிக்கப்பட்டது.**

**இந்த நிதியை யாழ். மாவட்டத்திலிருந்து பெற உதவியவர்களான செ.இ.நாதன், செ.சிவபாதம், சோதிப்பிள்ளை மற்றும் ஆலய பரிபாலகரையும் படத்தில் காணலாம்.**



கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சிறப்புத் தமிழிசை அரங்கு நிகழ்விலிருந்து...






படங்கள் பாஸ்கரன்

## வவுனியா வடக்கில் 26 குளங்கள் புனரமைப்பு

வவுனியா வடக்குப் பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள 20 குளங்கள் உலக உணவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலயுத்தம் காரணமாக சிதைவடைந்த இந்தக் குளங்கள்- உலக உணவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருவதால், பெருமளவு மழை நீரைச் சேமித்து வைக்க முடியும் என்றும், இவை சிறுபோக நெற்செய்கைக்கு மிகுந்த பலன் அளிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## வட்டக்கச்சியில் நினைவுத்தூபி அமைப்பு

(கிளிநொச்சி)

கடந்த கால யுத்தம் காரணமாக கொல்லப்பட்டபொது மக்களின் நினைவுத் தூபி, கிளிநொச்சி -வட்டக்கச்சி பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்தத்தின்போது, இலங்கை இராணுவத்தின் விமானக் குண்டு வீச்சுக்கள், மற்றும் எறிகணை வீச்சுக்கள் காரணமாக, வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

இவர்களது ஞாபகார்த்தமாகவே, வட்டக்கச்சி சந்தைக்கு அருகில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### கிளிநொச்சிப் பாடசாலைகளில் மருத்துவப் பரிசோதனை

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கனகபுரம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கனிஷ்ட பிரிவுகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அந்தந்த பாடசாலைகளில் வைத்து மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவப் பரிசோதனை முகாம் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஏனைய பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு புதிய கட்டடம்

கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச்சபைக்கான புதிய கட்டடம் 45 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்தம் காரணமாக, இடம்பெயர்ந்த வேறு இடங்களில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் சொந்த இடங்களில் இயங்க ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அருகாமையில், கூட்டுறவு நிறுவனங்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

### கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையம் புனரமைக்கப்படவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையம் தற்போதுள்ள சமாதான சூழலிலும், புனரமைக்கப்படாதுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இரணைமடுச்சந்தியில் அமைந்திருந்த கிளிநொச்சி மாவட்ட விவசாய ஆராய்ச்சி நிலையம் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் முற்றாகச் சேதமடைந்தது.

இந்த விவசாய ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பதற்காக நிதி ஒதுககப்பட்டுள்ளபோதும், இதுவரையில் புனரமைக்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அடிப்படை வசதிகளற்ற பாடசாலைகள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சில பாடசாலைகள் அடிப்படை வசதியற்ற நிலையில் இயங்கி வருகின்றன.

மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பனங்காமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவையே அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை, குடிநீர் வசதியின்மை, கட்டட வசதியின்மை, ஆசிரியர் விடுதியின்மை போன்ற அடிப்படை வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிலரின் விஜயங்களும்.... சில விடயங்களும்....

கடந்த வியாழனன்று காலை 10 மணிமுதல் சுமார் ஒன்றரை மணிநேரம் வரை 'ஏ-9' நெடுஞ்சாலையில் முகமாலை தொடக்கம் மிருசுவில் வரையிலான பகுதியில் பொதுமக்களுக்கான போக்குவரத்து தடைசெய்யப்பட்டு, அப்பகுதி முழுவதும் அதியுயர் பாதுகாப்பு வலயமாக- இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக தற்காலிகப் பிரகடனம் செய்யப் பட்டிருந்தது.

பல்வேறு காரணங்களுக்காக- அவசிய நோக்கங்களுக்காக, அப்பகுதியால் தம் சொந்தப் பிரதேசத்திற்கூடாகப் பயணிக்கும் உரிமை அந்தக் காலப்பகுதிக்குள் அந்த மண்ணின் மக்களுக்கு மட்டுமல்ல, அனைவருக்குமே மறுக்கப் பட்டிருந்தது.

காரணம், அப்பகுதிக்கு அமெரிக்கக் கடற்படையின் ஆசிய -பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்தின் தளபதியான லெப். ஜெனரல் வலஸ்.கி.கிறேக்ஸன் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டமையேயாகும்.

அந்த அந்நிய நாட்டுத் தளபதிக்கு, பாதுகாப்பு அளிக்கத் தான் இந்த ஏற்பாடு என்று கூறப்பட்டது. அதிகாரிகளுடன் சந்தித்து அளவளாவ அல்ல. வேறு காரணங்களுக்காக வருகை தரும் அந்நிய நாட்டு அதிகாரிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவசியம் தான். அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுமில்லை. ஆனால், அதற்காக முன்னறிவித்தல் ஏதுமின்றி பல்லாயிரக்கணக்கான பயணிகளின் இயல்பு இயக்கத்தைத் தடைசெய்வதும், இடைவழியில் நிறுத்திவைத்து அவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதும், அவர்களது நேரத்தை வீணடித்து அவர்களுக்கான பயணிக்கும் அடிப்படை உரிமையை அவமதிக்கும் செயலேயாகும்.

அன்றைய தினம் எத்தனையோ மிக முக்கியமான வாழ்வியல் பிரச்சினைகளுடன் அவற்றிற்கான தீர்வுகளைக் காணும் நோக்குடன் பல்வேறுபட்ட பயணிகள் அந்தப் பயணத்தை மேற்கொண்டு வந்து, இடைநடுவில் நிறுத்தப்பட்டு ஒன்றரை மணிநேரம் அநாவசியமாக காத்து நிற்கவைக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் அவசரங்களையும், மன அவலங்களையும், இங்கே விஜயம் செய்து விட்டுச் சென்ற ஆசிய-பசுபிக் கட்டளைப் பீட அதிகாரி அறியமாட்டார். அவருக்கு அவரது பயணத்தின் இலக்கை எட்டவேண்டும். அதுதான் முக்கியம். அவருடன் வருகை தந்த, அவரை வரவேற்ற, அவருடன் உரையாடிய ஏனைய அதிகாரிகளும்கூட மக்களின் துயரங்களை, அவசரங்களைப் பற்றி சிந்திக்கப் போவதில்லை.

அவர்களுக்கு அவர்களின் இராணுவ நலன்களே முக்கியம்.

குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்துப் பேசுவார்கள். நிச்சயமாக படைத்தரப்பு நலன்கள், பாதுகாப்பு மேம்பாடுகள், இராணுவத்தினரின், சமகால மற்றும் எதிர்கால இலக்குகள், அவற்றை எட்ட எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தே கலந்துரையாடுவார்கள்.

அத்துடன், வந்த வெளிநாட்டுத் தளபதியும் தனது வருகை மூலம் தனது நாட்டிற்கு ஏற்படக்கூடிய இராணுவ மற்றும் அரசியல் அனுகூல ஆதாயங்கள் குறித்தே அக்கறையாக இருப்பார்....

அதிலிருந்து அவர்கள் விலகமாட்டார்கள்.

மக்கள் தங்களின் அதிகார வட்டத்திற்குள் அடங்கி இருக்க வேண்டும். அவ்வளவு தான் அவர்களின் விருப்பம். ஆனால், அவர்கள் குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்துத் தான் கலந்துரையாடினார்களாம். ஆராய்ந்தார்களாம்.

மக்களை வீதி நெடுக கொதிக்கும் வெய்யிலில் அந்தந்த இடங்களில் அவலப்பட நிறுத்திவைத்துவிட்டு, அவர்கள் மக்களின் பாதுகாப்புக் குறித்து நிச்சயமாகப் பேசியே இருக்க மாட்டார்கள். தத்தம் நலன்களின் எதிர்கால நலன்கள் மற்றும் பாதுகாப்புக் குறித்தே பேசியிருப்பார்கள் என்பது மட்டும் உண்மை. இந்திய இராணுவத் தளபதிகள் புலனாய்வுத் துறை அதிகாரிகள் குடாநாட்டுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு வந்து இரகசியமாக ஏதேதோ உயர் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுடன் பேசிவிட்டுப் போகிறார்கள்

அவர்கள் வந்து போனபின் அமெரிக்க அதிகாரிகள் வருகிறார்கள், பேசுகிறார்கள், போகிறார்கள்....

பின் மீண்டும்... இதே கதையே தொடர்ந்து நடக்கிறது.

நிச்சயமாக, இந்த அதிகாரிகள் அனைவரும் ஒரு போதுமே இந்த மண்ணின் மக்களின் நலன் குறித்த நோக்கில் -பாதுகாப்புக் குறித்த சிந்தனைப் பொறுப்புடன் இங்கு வந்து போகிறார்களென எவரும் நம்பினால், அவர்களைப் போல் பரிதாபத்துக்குரிய அசடர்கள் வேறுயாரும் இருக்கப் போவதில்லை.

புதுடெல்கியிலும், வொஷிங்டனிலும் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தியாவும்- அமெரிக்காவும் இலங்கைப் படையினருக்கு வலுவூட்ட, அவர்களைப் போர்த்திறனுள்ளவர்களாக மாற்ற இராணுவ, ஆயுத உதவிகளையும் அவர்களுக்கான பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் போட்டிபோட்டுக் கொண்டு அள்ளிவழங்கியபடியே... இடைக்கிடை சமாதான அறிவுறுத்தல்களையும் கடமைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இதன் மூலம், தமிழ் மக்களை அவர்கள 'பேய்க்காட்ட' நினைக்கிறார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

முன்னெப்போதுமில்லாதளவுக்கு எல்லோருமே.... குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆர்வமிகு அக்கறை காட்ட வெளிக்கிட்டிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம எதுவும் இல்லாமல் இருக்காது.

நாம் குறிப்பிடுவது, வெளிப்படையாக கூறப்படும் காரணங்களையல்ல என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள்....

இதற்கான உட்காரணங்கள் ஆழமானவை. தொலைநோக்கு இலாபஇலக்குகளைக் கொண்டவை. தமிழ் மக்களுக்கும் அவர்கள் தம் தாயகப் பிரதேசத்துக்கும் மட்டுமல்ல, அவர்களின் அபிலாஷைகளுக்கும் ஆபத்தானவை என்ற அரசியல் நோக்கர்களின் எச்சரிக்கையூட்டும் கருத்துக்களை யாரும் நிராகரித்துவிட முடியாது.

இந்த அதிகாரிகளின் ஆலோசனைகள் இராணுவத் தரப்புக்கும், அரசுக்கும் தானேயன்றி, தமிழ் மக்களின் நலன் குறித்து, தமிழ் மக்களிடம் கூறப்படுவதில்லை என்பதை கவனத்திற் கொள்ள வேண்டியது மிக மிக அவசியமான தொன்றாகும்.

## நாடும் நடப்பும்




பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஆளும் கூட்டணியுடன் விரைவில் ஜாதிக ஹெல உறுமய இணையும் ?

பௌத்த பிக்குகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள ஜாதிக ஹெல உறுமய, விரைவில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான ஒரு இரகசியப் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றும் விரைவில் செய்துகொள்ளப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவித்தன.

அரசாங்கத்தை கவிழ்க்கும் எதிர்க் கட்சிகளின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில்லை என, ஏற்கனவே தெரிவித்திருந்த ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவளிக்கப் போவதாகவும் கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மைப் பலத்தை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கும் வகையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றின் பதவியை வாக்கெடுப்பிற்கு விடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்தபோதும் அதற்கு ஜாதிகஹெல உறுமய ஒத்துழைக்க மறுத்தது. ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டபடி ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுடன் இந்த வாக்கெடுப்பு நடைபெற்றிருந்தால் அது எதிர்க் கட்சிகளின் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதாக அமைந்திருக்கும் எனவும் நம்பப்படுகிறது.

# அமெரிக்க படைத் தளபதியின் இலங்கை விஜயம் நிறைவு!

## அமெரிக்கத் தூதரகம் அறிக்கை

முக்கியமான இராணுவ அதிகாரிகள், அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திய அமெரிக்காவின் பசுபிக் பிராநதிய கடற்படையின் கட்டளை அதிகாரியான லெப். ஜெனரல் வலஸ் கி.கிறேக்சன் தனது பயணத்தை நிறைவு செய்திருப்பதாக அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பால் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த இவர் அரசாங்க, இராணுவ உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடாத்தியதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இராணுவ, கடற்படை, விமானப்படைத் தளங்களுக்கும் விஜயம் செய்திருந்தார்.

அமெரிக்க மற்றும் இலங்கை இராணுவங்கள் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பின் சின்னமாகவும், பலம் மிக்க இரு நாட்டு உறவுகளின் அடையாளமாகவும் இந்த விஜயம் இடம் பெற்றது எனவும் அமெரிக்கத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், இவரது விஜயம் குறித்த தகவல்களை ஆரம்பத்தில் வெளியிடாத அமெரிக்கத் தூதரகம் - விஜயம் முடிவுற்றபின்னரே தகவல் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரசசேவையின் ஆணைக்குழுவுக்கு பட்டதாரிகள் நியமனம் தெரியாதாம்!

## செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பதினேழாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின்படி அரச சேவைகளில் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதானால் அதனை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப் படுத்தவேண்டும்.

ஆனால், அரசாங்கத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டதாரிகள் நியமனம் பற்றி இதுவரை அரச சேவைகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

ஆகையால், வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வது பற்றி அரச சேவைகள் ஆணைக குழுவுக்கு எந்தவித பொறுப்பும் இல்லையென, ஆணைக் குழுவின் செயலாளர் லக்ஷ்மி குணவர்த்தனா தெரிவித்தார்.

17 ஆவது அரசியலமைப்பு யாப்புத் திருத்தத்தின்படி, அரச நியமனங்கள் வழங்கப்படும்போது அவைபற்றி அரச சேவைகள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்படுவதுடன், நிலவும் வெற்றிடங்கள் தொடர்பாகப் போட்டிப் பரீட்சையோ, நேர்முகப்பரீட்சையோ நடத்தத் தகுதியானவர்களை மாத்திரம் தெரிவுசெய்யவேண்டியதோடு, சேர்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதங்களை வழங்கும் அதிகாரம்கூட, அரசுக்கு இல்லையெனக் கூறப்படுகிறது.

# பிரபல அரசியல் வாதியின் இல்லத்தில் நள்ளிரவு நடைபெற்ற விசேட சந்திப்பு

## நிருபம் சென்னும் பங்கேற்றாராம்

பிரபல அரசியல்வாதி ஒருவரின் - கொழும்பில் அமைந்துள்ள இல்லத்தில் கடந்த 4 ஆம் திகதி நள்ளிரவு முதல் மறுநாள் அதிகாலைவரை நடைபெற்றதாகக் கூறப்படும் அதிவிசேட பேச்சுவார்த்தை குறித்து அரசியல்வாதிகள் மட்டத்தில் பேசப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க, துறைமுக மற்றும் விமானசேவைகள் அமைச்சர் மங்கள சமரவீர, இந்தியத் தூதுவர் நிருபம் சென் ஆகிய முக்கியஸ்தர்கள் மற்றும் இந்தியத் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவுகளுக்குப் பொறுப்பான செயலாளர்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த 4 ஆம் திகதி புதன்கிழமை, இரவு 11 மணிமுதல் மறுநாள் அதிகாலை 2.30 மணிவரை இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது, அந்த இல்லத்தைச் சுற்றிப் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

இது குறித்துத் தகவல்கள் எதுவும் வெளியிடப்படாவிடினும் முக்கியமான பல விடயங்கள் குறித்து, இதன்போது பேசப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

# நீர்வளத்தை அரசாங்கம் தனியாருக்கு விற்காதாம்

நீர்வளத்தை அரசாங்கம் எவ்வாறான நிலையிலும், தனியாருக்கு விற்கமாட்டாதென ஆற்றுவள அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.


தனியாருக்கு நீர்வளத்தை விற்பது தொடர்பாக ஏதாவது உடன்படிக்கை அல்லது நாடாளுமன்றில் மசோதா என்பன கொண்டுவரப்படுமாக இருந்தால், அவையனைத்தும் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்படும்.

அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையானது, நீர் முகாமைத்துவத்தைப் பேணுவதற்கேயொழிய, வேறொன்றுக்குமில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

செய்திக் கட்டுரை... - கண்ணன்

# கவனிப்பாரற்ற நிலையிலுள்ள நெடுந்தீவு துறைமுகப் பகுதிகள்

நெடுந்தீவு பிரதேச மக்களின் அன்றாட தேவைகளினை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கூட யாழ். பெருநிலப்பரப்புடன் அடிக்கடி தொடா



புகளை வைத்துக் கொள்ள வேண்டியதாகவுள்ளது. இந்தத் தொடர்புகளுக்கு கடல் மார்க்கம் ஒன்று மட்டுமே இருப்பதுவும் குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு கடல் மார்க்கத் தொடர்புக்கு படகுகள், அப்படகுகள் வந்து செல்ல ஒரு துறைமுகம் என்பன இருப்பது மிகவும் முக்கியமானதும், அவசியமானதும் ஒன்றாகும்.


இந்த வகையிலே நெடுந்தீவுக்கென மாவிலிதுறைமுகம் ஒன்று உள்ளபோதும் அதன் முக்கியத்துவம் பற்றி எந்தவித அக்கறையும் இன்றி, ஏதோ படகு வருகின்றது. வந்தது பயணிகள் பாலத்தில் இறங்கி தங்கள் இடங்களுக்கு செல்கின்றார்கள் என்ற நிலையுடன் நின்று விடுகின்றார்கள் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், நெடுந்தீவின் நிர்வாக அதிகாரிகளும்,

ஒரு நாட்டுக்கு துறைமுகங்கள் எத்தனை முக்கியத்துவமோ அதே போலத்தான் தீவுப்பகுதிகளுக்கும் துறைமுகம் அவசியமாகவுள்ளது. இந்த நிலையிலே நெடுந்தீவின் துறைமுகப்பகுதியும், அதன் கரையோரங்களும் எந்த நிலையில் உள்ளதென கவனிப்பாா யாருமில்லை.

இந்தத் துறைமுகத்தின் அமைவுக்கு ஏற்ப ஒரு தடவையில் ஒரு படகு மட்டும் பயணிக்கக் கூடியதாக கடற்பாதையினை ஆழமாக்கி அதனூடாகவே பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. கடும் காற்றுக் காலங்களில் படகு சற்று வழிமாறினால் மணல் திட்டிகளில் தரை தட்டி விடும். அதனால் பயணிகள் படும் அவஸ்தைகள் எண்ணில் அடங்காதவை.

துறைமுக கடற்பகுதியினை ஆழமாக்கி எந்தக் காலத்தில் சீரான சேவை இடம்பெற வழி சமைக்க வேண்டுமென பலரும் படகு தரை தட்டும் போது பேசுவதும் பின்னர் அதை மறந்து பயணிப்பதுமாகவே பயணம் தொடர்கிறது.

சோளகக் காற்று வீசுகின்றபோதும், அதனை அண்டிய காலப்பகுதியிலும் கடல் வற்றுவது வழமை. அதன் போது துறைமுகப் பகுதியும், படகுகள் பயணிக்க முடியாதளவுக்கு வற்றி பெரும் மணற்திடலாக காட்சிதரும். இந்த வேளையில், குறித்த நேரத்



துக்கு படகுகள் புறப்பட முடியாத நிலை ஏற்பட்டு பல தடங்கல்கள் ஏற்படும். வெள்ளம் எப்போது வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்தே பயணம் தொடரும்.

இந்த நிலையிலே கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் துறைமுகப் பகுதி ஆழமாக்கப்பட்டது. அது மீண்டும் தூர்வடைந்துள்ளது. நெடுந்தீவின் துறைமுகப் பகுதியில் தோற்றத்தைப் பார்த்து அதற்கேற்ப ஆழமாக்குவதாகத் தெரியவில்லை.

துறைமுகத்தின் படகு வழிப்பாதை பள்ளமாக்கப்படும் போது அதன் இரு புறங்களிலும் மணல் மேடுகளே உள்ளன. அவை நளடைவில் கடல் தீவினால் அடித்துச் செல்லப்பட்டு மீண்டும் தோண்டப்பட்ட வழிப் பாதையை நிரவிவிடும். இதற்கு ஏதாவது மாற்றுவழிகளை கடைப்பிடித்து, ஒரு நீண்டகால நோக்கில் துறைமுகப் பகுதி முழுவதையும் ஆழமாக்கலாம். அன்றி மணல் மேட்டில் இருந்து வரும் மணலினை தடுக்கும் வகையில் தடுப்புச் சுவர்களை அமைக்கலாம் என பல வழிகள் உள்ளன. இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு யார் இந்த வேலையினைப் பொறுப்பேற்று முன்னகர்த்த வருவார்கள் என்ற கேள்வியே இங்கு முன்னெடுத்து நிற்கின்றது.

துறைமுகப் பகுதிக் கடல் வற்றும் வேளையில் பயணிகள் படகு சேவை சீராக நடைபெறவேண்டுமென் பதற்காக 1999ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் துறைமுகத்தின் நுழைவாயின் பகுதியில் UNHCR நிறுவனத்தின் நிதியுதவியுடன் தற்காலிக பாலம் அமைக்கப்பட்டு அதன் பயன்பாடு மக்களுக்கு கிடைக்கு முன்னமே பழுதடைந்து கிடக்கின்றது.

நன்கு திட்டமிடப்படாத நிலையில் உரிய அதிகாரிகளால் பல இலட்சம் ரூபா செலவிலே அமைக்கப்பட்டு வீணாகிப் போய்க் கிடக்கின்றது. நாளடைவிலே இந்தப் பாலத்துக்கு பயன்படுத்திய கற்களும் துறைமுக நுழைவாயிலை அடைக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகும் என பலா் மத்தியிலும் ஒரு ஆதங்கம் அலைமோதி வருகின்றது.

நெடுந்தீவு சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகின் அடிப்பாகம் அடிக்கடி பழுதடைவதும், இந்தத் துறைமுகத்தின் ஆழமின்மையால் என்பது இங்கே குறிப்பிட வேண்டும். அது மட்டுமன்றி துறைமுக வழியிலே இடையிலேயே பாறைக் கற்களும் உள்ளன. அவற்றையும் உடைத்து அகற்றி ஆழமாக்கினால் தான் பயணிகள் படகுகள் சீராக, நீண்டகால சேவை செய்ய முடியும். இதனை யார் முன்னின்று செய்வார்கள்...?

□□□□

ஒரு நிமிடம் சிந்திப்போம்....

# எமது பிள்ளைகள் மீது நாம் அன்பு காட்டுவோம்

"பிள்ளையின் ஆளுமை முழுமையாகவும், இணக்கமாகவும் வளர்ச்சி அடைவதற்கு மகிழ்ச்சியும், அன்பும், புரிந்து கொள்ளுதலும், நிறைந்த ஒரு குடும்ப சூழல் தேவை.;;இது பிள்ளைகளின் உரிமைபற்றி ஐ.நா.சபை கூறும் உறுதிமொழிகள் ஆகும்.

சிறுவர்களுக்கு கட்டாய கல்வியை உலகளாவிய ரீதியில் மேற்கொள்ள சட்டங்கள் வகுத்தாலும் பெரும் முதலாளிகள் தமது லாபத்துக்காக சிறுவர் உரிமைகளை பறிப்பவர்களாக இருக்கின்றார்கள்.

குடும்ப சூழலால் வறுமைக்குட்பட்ட பிள்ளைகளை "பள்ளிக்கனுப்பி படிப்பிக்கிறன், என்ர வீட்டில வந்திருந்து படிக்கட்டும், நான் எல்லாச் செலவையும் பார்த்துக் கொள்ளுறன்" என்று கூறி தமது வீடுகளில் சிறுவர்களை தொட்டாட்டி வேலை செய்யும் கைப்பொம்மைகளாக்கும் போக்கு கல்வியியலாளர்கள் மத்தியில் அதிகம் இருக்கின்றது.

இங்கு பிள்ளைகள் பள்ளி போகிறார்கள், வீட்டில் வேலை செய்கிறார்கள். அதாவது கடைக்கு போக வீடுவளவு கூட்ட – பிள்ளை பராமரிக்க உடுப்பு தோய்க்க – மோட்டார் சைக்கிள் துடைக்க – வீட்டுக்கு காவல் இருக்க அப்படியாக அவர்களுக்கு கொடுக்கும் வேலைகள் நீளும்.

இதனால் பிள்ளைகளுக்கு கல்வி ஒழுங்காக புகட்டப்படுவதில்லை. அத்துடன் அன்பு காட்டாது முரட்டுத் தனமாக நடந்து கொள்ளல். இவையெல்லாம் அந்தப் பிள்ளைக்கு உள்ளார்ந்த தாக்கத்தை உண்டு பண்ணுகிறது.

வயது வந்த ஒருவரை வேலைக்கமர்த்தினால் நிறைய பணம் செலவாகும் என்ற நோக்கில் படித்த மூளையுள்ளவர்கள் கையாளும் தந்திரப் புத்தி தான் சிறுவர்களை 'படிப்பிக்கிறம' என்ற போர்வையில் பாழாக்கும் செயலாகும். மாறாக இவர்கள் சிறுவர்கள் மீது அன்புகாட்டி, தகுந்த முறையில் கல்வி புகட்டி, பிள்ளையின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, நல்லுறவை பேணிக் கொண்டால், ஆரோக்கியமான நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியும்.

சிறுவர்களை வேலைக் கமர்த்தி வைத்திருப்போர் பொதுவாக அவர்களின் உடல் – உளரீதியான முன்னேற்றத்தில் அக்கறை செலுத்துவதில்லை. இயந்திரமாக இயங்கும் அடிமைப் பிள்ளைகள் மௌனித்தவர்களாக தமது விருப்பு வெறுப்புக்களை வெளிக்கொணர முடியாது அந்தரிக்கின்றார்கள். இவை தான் சமூகத்தில் விலகல் நடத்தை கொண்டு செயற்பட காரணமாகும்.

உலகத்தில் சிறுவர்கள் மேம்பட வேண்டும் என்று பெரியளவில் கதையளக்கிறோம். ஆனால், அவர்களுடன் அன்பாக உறவாட, பகிர்ந்துண்டு மகிழ நேரம் ஒதுக்குவதில்லை. இவையும் மனித உரிமை மறுப்புச் செயல்கள்தான்.

சிறுவர்கள் பேசுகின்ற மொழிகளை பொறுமையாக செவிமடுத்து, அவர்களை உற்சாகப்படுத்தி, எமது கருத்துக்களையும், எண்ண்ங்களையும் கேட்க வேண்டும், என்று நிாப்பந்திப்பதை குறைத்து, அவர்களின் திறமைகள் வெளிக்கொண்டுவர முயல்வோம்.

எமது பிள்ளைகள் மீது மற்றவர்கள் அன்பு காட்ட வேண்டும் என்பதை எதிர்பார்ப்பதைவிட, நாம் எமது பிள்ளைகள் மீது அன்பு காட்டுவோம். அத்துடன் மற்ற பிள்ளைகள் மீதும் காட்டுவோம். சிறுவர்களின் உரிமைகளை

பாதுகாப்போம்...
சிந்திப்போம்...
செயற்படுவோம்...

-யாழ் ராதவல்லி

சேமிப்பு

# குழந்தையின் எதிர்காலத்தை இன்றே திட்டமிடுங்கள்




உங்கள் குழந்தையின் வருங்காலத்துக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 'கொமர்ஷல்' வங்கியானது 'அருணலு' சிறுவர் சேமிப்புக் கணக்குத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கணக்கில் சேமிக்கப்படும் மீதி, உங்கள் அன்புச் செல்வங்களின் வளமான வருங்காலக் கனவுகளை நனவாக்க உதவும்.

குழந்தைப் பருவம் தொடக்கம் பராயமடையும் வரை உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்தையும் சிறப்பாக மேற்கொள்ள அருணலு சேமிப்புக் கணக்கு உதவுகின்றது. உங்கள் குழந்தைச் செல்வம் வளர வளர அருணலு கணக்கு மீதியும் அதிகரித்துச் செல்லும்.

கொமர்ஷல் வங்கியிலுள்ள நாம் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு அறிவோம். இதனால், அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கு உங்கள் அன்புச் செல்வங்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் நிதியை வழங்கி, அவர்களின் அறிவாற்றல் விருத்திக்கும், சுபீட்சமான எதிர்காலத்துக்கும் வழிவகுக்கின்றது.

ஒவ்வொரு வருடமும், கொமர்ஷல் வங்கியானது ஆண்டு 5 புலமைப்பரிசில், பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்ளும் சிறார்களுக்குப் பணப்பரிசில்களை வழங்குகின்றது. சென்ற வருடம் கூட யாழ்.மாவட்டத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற 10 பாடசாலைகளைச் சேர்ந்த 12 குழந்தைகளுக்குப் பணப்பரிசுகள் வழங்கி கௌவரப்படுத்தினோம். மேலும், இந்தத் திட்டத்தினூடாக பின்வரும் நனமைகளை நாம் வழங்குகின்றோம்.

வட்டியானது நாளாந்தம் நிலுவையின் அடிப்படையில், கணக்கிடப்பட்டு மாதாந்தம் முடிவில் கணக்கில் சேர்க்கப்படும்.

பிள்ளையின் அவசர வைத்திய கல்வித் தேவைகளுக்குப் பணத்தை மீளப்பெற முடியும்.

இவ்வருடம் ஆவணி மாதத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நெருங்கி வருவதால், தாமத




மின்றி இன்றே அருணலு சிறுவர் கணக்கு ஒன்றை விரைவாக ஆரம்பியுங்கள்! பரீட்சை நடைபெறும் திகதிக்கு முன்பாக, ரூபா 5000/- க்கு குறையாத மீதி இருந்து, பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறும் சிறார்களுக்குப் பணப்பரிசுகள் காத்திருக்கின்றன!

அருணலு...!

உங்கள் அன்புக்குரிய எந்தக் குழந்தைக்கும் மிகவும் உகந்த அனபளிப்பாகும்!

# ஈராக்கின் நஜாவ் நகரில் மூன்றாவது நாளாக மோதல்



(பக்தாத்)

ஈராக்கின் நஜாவ் நகரில் சதார் ஆதரவுப் படையினருக்கும் அமெரிக்கப்படையினருக்குமிடையே நேற்று மூன்றாவது நாளாகவும் மோதல்கள் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவித்தன.

கடந்தபுதன் வியாழன் ஆகிய இரண்டுநாட்களில் இடம்பெற்ற மோதலில் 300 சதார் ஆதரவுப்படையினரைத் தாம் கொன்றதாக அமெரிக்



கப்படை தெரிவித்தபோதும் தமது தரப்பில் 36 பேரே உயிரிழந்ததாக சதார் ஆதரவுப்படையினர் தெரிவித்தனர்.

மோதல் இடம்பெறும் பகுதிகளுக்கு அமெரிக்க இராணுவ ராங்குகள் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் மோதல் இடம்பெற்ற பல பிரதேசங்கள் அமெரிக்கப்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் இரண்டுஅமெரிக்க கடற்படையினர் கொல்லப்பட்டனர் அத்துடன் பாக்தாத்தில் நடத்தப்பட்ட றொக்கட்தாக்குதலில் மூன்று அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை நஜாவ் மாகாண ஆளுனர் அட்னான் அர் சொர்பி நேற்றுமுன்தினம் தனது அறிக்கையில் சதார் ஆதரவுப் படையினர் 24 மணி நேரத்திற்குள் நஜாவ் நகரை விட்டு வெளியேறவேண்டுமெனவும் இல்லையேல் தொடர்ச்சியான தாக்குதல்களை சந்திக்க வேண்டிவருமெனவும் எச்சரித்திருந்தார்.

அத்துடன் சதார் ஆதரவு படையினருடன் எவ்வித சமரசத்திற்கும் இடமில்லையெனவும் எவ்வித சமாதான உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படமாட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் நஜாவ் மாகாணத்திலிருந்து சதார் ஆதரவுப் படைகளை 24 மணிநேரத்தினுள் வெளியேறுமாறு ஈராக்கின் மத்திய அரசாங்கமே கட்டளையிட வேண்டுமென ஈராக்கின் துணை ஜனாதிபதி இப்ராஹிம் அல்ஜபாரி தெரிவித்தார்.

அத்துடன் நான் நினைக்கின்றேன். இந்த மோதல்களில் ஈராக்கின் பொது மக்களே கொல்லப்படுகின்றனர். இவ்வாறு கொலைகள் இடம்றெுவதானால் ஈராக்கை எவ்விதத்திலும் கட்டியெழுப்பமுடியாது. எனவே, நாம் பொது மக்களைப் பாதுகாக்க வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டும். துப்பாக்கிச் சன்னத்தால் அல்ல எனத் தெரிவித்தார்.

நஜாவ் நகரிலுள்ள முஸ்லீம்களின் பள்ளிவாசல்களை அமெரிக்கப் படையினர் சேதமாக்கிவிட்டதாக சதார் குற்றம்சாட்டியுள்ளார். எனவே, புனிதப்பிரதேசங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதற்கு சகல உள்ளூர் முஸ்லிம்களும் ஆயுதம் ஏந்த வேண்டுமெனவும் அவர் அறை கூவல் விடுத்துள்ளார்.



கடந்த வியாழன், வெள்ளி இரு தினங்களும் பாக்தாத் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் 19 பொது மக்கள் கொல்லப்பட்டதுடன் 110 வரையானோர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்க, சதார் படைகளுக்கிடையே சமரா நகரில் இடம்பெற்ற மற்றொரு மோதல் சம்பவத்தில இரண்டு ஈராக்கியர் கொல்லப்பட்டனர்.



பஸ்ரா நகரில், இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினமும் பிரிட்டன் படையினர் சதார் ஆதரவுப் படைகளுக்கெதிரான தாக்குதலைத் தொடர்ந்தவண்ணமிருந்தனர்.

# கைதிகள் துன்புறுத்தல் நாடகம் ஜோர்தானில் அமோக வரவேற்பு

ஈராக் போரில் பிடிக்கப்பட்ட கைதிகளை அபுகிரேப் சிறையில் அமெரிக்க இராணுவத்தினர் சித்திரவதை செய்ததும், நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்தியதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை கடுமையாக கண்டித்தன.

அமெரிக்க வீரர்களின் இந்த கொடூர செயலை மையமாக வைத்து, ஜோர்தான் நாட்டில் ஏராளமான மேடை நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இந்த நாடகங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நாடகம் நடக்கும் திரையரங்குகளில் கூட்டம் நிரம்பி வழிகிறது.

ஜோர்தான் நாட்டின் பிரபல நடிகை சுகார் பசீத் இதில் நடித்துள்ளார். அம்மான் நகரில் ஒரு அரங்கில் நடந்த நாடகத்தில் ஈராக்கிய கைதி ஒருவன், அமெரிக்கரை எதிர்த்து பேசியதற்காக அமெரிக்க வீரர்கள் சித்திரவதை செய்வது போன்ற காட்சியில் நடிகை சுகார் பாசீத்



நடித்த காட்சி.

# யெமனில் ஒருமாதமாக நடந்த சண்டை முற்றுப்பெற்றதாக அரசாங்கம் அறிவிப்பு!



யெமன் நாட்டில் கடந்த ஒரு மாத காலமாக இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக நடத்தப்பட்ட தாக்குதல் முற்றுப்பெற்றுவிட்டதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அதிகாரிகளின் தகவலின்படி இஸ்லாமிய ஹியா ஷேடி அமைப்பின் தலைவரான ஷேக், ஹிசைன் அல் - கௌத்தியின் மிகவும் உறுதியாக இருந்த கடைசி நகரையும் யெமன் படையினர் கைப்பற்றியதாகத் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதமாக இடம்பெற்ற மோதலில் இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் மற்றும் பொது மக்களென சுமார் 200 பேர்வரை மலைப் பிரதேசமான மரன் பகுதியில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யெமன் படையினர் கைப்பற்றிய நகரில் ஷேக் ஹிசைனின் ஆதரவாளர்கள் மற்றும் அவரது அமைப்பின் உறுப்பினர்கள இருக்கின்றார்களா என்பதனைக் கண்டறிவதற்காக படையினர் தற்போது வீடு , வீடாகத் தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர்.

ஷேக் ஹிசைன் சட்ட ரீதியற்ற மதப்பிரிவுகளை நடத்தி வருவதாகவும், ஆயுதக் குழுக்களுக்கு பயிற்சிகள் வழங்கி அவர்களை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு எதிராக பயன்படுத்தி வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இரு பகுதியினருக்குமிடையில் கடந்த யூன் மாதம் நடுப்பகுதியில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த மோதல் மூலம் முறிவடைந்துள்ளது. கடந்த ஒரு மாதமாக இடம்பெற்ற புதிய மோதல்களால் நாற்பது பொது மக்கள் வரை கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இரு பகுதியினருக்குமிடையில் கடந்தவாரம் அமைதி முயற்சிகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது தேல்வியில் முடிவடைந்துள்ளது.

# அர்ஜுன் டாங்கிகள் இந்தியப்படைக்கு நேற்று உத்தியோகபூர்வமாக கையளிப்பு



இந்திய ராணுவத்துக்கு இது வரை வெளிநாடுகளில் இருந்து தான் டாங்கிகள் வரவழைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஜனவரி மாதம் கூட ரஷ்ய தயாரிப்பான டி.90 வகை டாங்கிகள் ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

டாங்கிகளை இந்தியாவிலேயே வடிவமைத்து தயாரிக்க திட்டமிடப்பட்டது. அதன்படி நீண்ட நாள் ஆராய்ச்சிக்கு பிறகு சர்வதேச தரத்தில் ஆவடி டாங்கி தொழிற்சாலையில் நவீன டாங்கிகள் தயாரிக்கப்பட்டன. இந்த டாங்கிகளுக்கு "அர்ஜுன்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

ஆற்றல்மிகு அர்ஜுன் டாங்கிகள் 58 தொன் எடை கொண்டவை. அவை சம தளத்தில் மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும். கரடு முரடான பாதைகளில் மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் சக்தி கொண்டது.

முழுக்க முழுக்க கம்ப்யூட்டரில் இயங்கும் இந்த டாங்கிகள் பகல் - இரவு எந்த நேரத்திலும் இலக்குத் தவறாமல் சுடும் ஆற்றல் உடையது. இதன் முதல் குறியே மிகச் சரியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

அர்ஜுன் டாங்கிகள் தண்ணீரிலும் ஓடும். 2.4 மீற்றர் ஆழ தண்ணீரிலும் அது இயங்கும். சுடும் திறன், ஓடும் திறனுடன், இதில் நவீன போர் கவசமும் இருப்பதால் உலகில் உள்ள இராணுவ டாங்கிகளில் இதுவும் முதன்மையான ஒன்றாக கருதப்படுகிறது.

இது மிகப் பெரிய தொழில்நுட்ப சாதனையாகும். ஆவடி தொழிற்சாலையில் முதல் கட்டமாக 124 அர்ஜுன் டாங்கிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. முதல் தொகுப்பின் 58 அர்ஜுன் டாங்கிகளை இந்திய இராணுவத்திற்கு வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை ஆவடி டாங்கி தொழிற்சாலையில் நடந்தது.

# உலக நோக்கு

## குண்டு வெடிப்பில் நொருங்கிய கார்



பாகிஸ்தானின் கராச்சி நகரில் முக்கிய அரசஅலு வலகம் முன் நிறுத்தப்பட்டி ருந்த காரில் குண்டுவெடித் தது. இந்தக் கார்க்குண்டுத் தாக்குதலில் 2 பேர் பலியானார்கள். 5 பேர் காயம் அடைந்தனர். குண்டு வெடிப்பில் சின்னா பின்னமான காரை பாகிஸ்தான் பொலிஸார் சோதனையிடும் காட்சி.

## சீனாவில் சுரங்க விபத்து 10 தொழிலாளர் உயிரிழப்பு

சீனாவின் சுரங்கப் பகுதியில் ஏற்பட்ட காஸ் வெடிவிபத்தில் பத்து சுரங்கத் தொழிலாளர் கொல்லப்பட்டதுடன், ஐவர் சுரங்கப் பகுதியினுள் அகப்பட்டுள்ளதாக சீனாவின் அரச செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சீனாவின் சான்ஜிக் மாகாணத்திலுள்ள சுரங்கப் பகுதியினுள் 99 சுரங்கத் தொழிலாளர்கள் கடமையிலிருந்த வேளையிலேயே இந்த காஸ் வெடி விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் சுரங்கப் பகுதியினுள் அகப்பட்டிருந்த ஐந்து பணியாளர்களும் மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டதாகவும் அரச செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சீனாவில் வருடந்தோறும் ஆயிரக்கணக்கான சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்படுவதும், பின்னர் சீன அரசாங்கம் அவர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படுமென



உறுதி வழங்குவதும் வழமையாகிவிட்டதென செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிகாரிகளின் புள்ளி விபரத் தகவல்களின்படி கடந்த வருடம் பத்து மாதங்களில் மட்டும் ஏழாயிரம் சுரங்கத் தொழிலாளர்கள் காஸ் வெடிப்பினால் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருடம் பெப்ரவரி மாதத்திலும் சுரங்கப் பகுதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் 32 பொது மக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கிலுள்ள இத்தாலியப் படைகள்

## 15 ஆம் திகதிக்குமுன் வெளியேறாவிட்டால் இத்தாலிய நகரங்கள் தாக்கப்படும்

### இஸ்லாமிய அமைப்பு எச்சரிக்கை

ஈராக்கில் நிலைகொண்டுள்ள இத்தாலியப் படைகள் அங்கிருந்து எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறாவிட்டால், இத்தாலிய நகரங்கள் தாக்கப்படுமென அல்கொய்டாவுடன் தொடர்புடைய இஸ்லாமிய அமைப்பு எச்சரித்துள்ளது.



அபு ஹப்ஸ் அல் - மாஸ்றி பிரிகேட் என்ற இஸ்லாமிய அமைப்பே இந்த எச்சரிக்கையை இணையத்தளம் மூலம் விடுத்துள்ளது. அந்த இணையத்தள எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் ஈராக்கில் நிலை கொண்டுள்ள இத்தாலியப் படையினர் மீள அழைக்கப்படாவிட்டால், ரோம் மற்றும் இத்தாலிய நகரங்களை எமது அமைப்பு தாக்குவதற்குத் தயாராகவுள்ளது.

உமது பிரதேசத்தை நீங்கள் பாதுகாக்க தயாரில்லையெனில் தனித்தனியாகவுள்ள ஒவ்வொரு பிரதேசமும் தாக்கப்படும்.

இந்த அமைப்பு ஏற்கனவே ஐரோப்பிய நாடுகளுக்கெதிராகவும் எச்சரிக்கை விடுத்ததுடன் ஸ்பெயின், மட்றிட் பகுதியில் இடம்பெற்ற ரயில் குண்டுத் தாக்குதலுக்கும் உரிமை கோரியிருந்தது.

ஈராக்கில் மூவாயிரம் இத்தாலியப் படையினர் நிலை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# திருகோணமலை - குரங்குபாஞ்சானில் புலிகள் - முஸ்லிம்கள் சந்தித்துப் பேச்சு!

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கிண்ணியா முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை 11.00 மணிக்கு, குரங்குபாஞ்சான் பிரதேசத்தில் நடைபெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்ட கண்காணிப்பாளர்களான டக்பின், மார்க் கிரட்டா ஆகியோரின் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் சார்பில் - மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், குரங்குபாஞ்சான் முகாம் பொறுப்பாளர் மொழிவாணன் மற்றும் நான்கு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் பிரதிநிதிகள் சார்பில் - கிண்ணியா ஜமியத்துல் உலமா சபையின் செயலாளர் என்.வை. என்.காரியத்துல்லா மௌலவி தலைமையில் விவசாயிகள், உழவு இயந்திர உரிமையாளர்கள், வண்டில் [illegible]க்காரர்கள், பொதுமக்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

குரங்குபாஞ்சான் பிரதேசத்தில் முகாம் அமைந்த பகுதியில் இருந்து 50 மீற்றர் தூரத்துக்கு அப்பால் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்குப் புலிகள் தடையில்லை. விவசாயிகள் தங்கள் விவசாயச் செய்கையைத் தடையின்றித் தொடரமுடியும்.

காடுகளில் பச்சை மரங்கள் விறகுக்காகவும், மற்றைய தேவைகளுக்காகவும் அழிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. எமது வனவளப் பாதுகாப்புப் பிரிவினர் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் வன வளத்தைப் பாதுகாத்து வருகின்றனர். அவர்கள் மர மீள் நடுகைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எந்தக் காரணம் கொண்டும் பச்சை மரம் வெட்டுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். விறகுக்காக அழிந்த காட்டு மரங்களை எடுத்துச் செல்ல முடியும். ஆனால், வன வளப் பாதுகாப்புக்காக, வண்டில் ஒன்றுக்கு - ரூபா 50.00 ஐச் செலுத்தவேண்டும்.

இதற்காக எமது அலுவலகங்கள் பட்டிநூறு, ஈச்சந்தீவு ஆகிய இடங்களில் அமைக்கப்படும். அங்கு பணத்தைச் செலுத்தி உரிய பற்றுச்சீட்டுடன் சென்று விறகுகளைச் சேகரிக்க முடியும் என அந்தச் சந்திப்பில் புலிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பு சம்பந்தமாக உலமா சபைச் செயலாளர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடுகையில் -

சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றது. தலைமைப்பீடத்தின் அனுமதியுடன், அரசியற் பொறுப்பாளர் குரங்குபாஞ்சான் பிரதேசத்தில் முஸ்லிம்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் பொறுப்பாளர், நாங்கள் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் முஸ்லிம்களின் பிரச்சினைகளை அணுகியுள்ளார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

எதிர்காலத்தில் ஏற்படும் சிறுசிறு சம்பவங்கள் பற்றி, இரு தரப்பாரும் பேசி இணக்கம் காண்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (04)

# மூதூரில் முஸ்லிம் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூரில வைத்து முஸ்லிம் நபரொருவர் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மூதூர் நகரில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள, தோப்பூர் கிராமத்தில் வைத்தே, நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் அப்துல் மஜீத் கபூர் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் சுடப்பட்டதற்கான காரணம எதுவும் கண்டறியப்படாத நிலையில் மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தனிப்பட்[illegible]ச்சினை காரணமாகவே இவர் சுடப்பட்டதாகவும் இன்னொரு செய்தி தெரிவிக்கிறது.

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு! நேற்று இணையத் தளத்தில்

கடந்த மே மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இணையத்தளம் மூலம் வெளியிடப்பட்டன.

கொழும்பு நகர்ப்பகுதியைச் சேர்ந்த 30 பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைப் பெறுபேறுகளை நேரில் பெற்றுக் கொண்டிருப்பதாகவும் ஏனைய பாடசாலைகளுக்கான பெறுபேறுகள் தபால் மூலம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் பரீட்சைத திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எட்டு மாணவிகள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியைப் பெற்றிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று மாலை பரீட்சை முடிவுகள் இணையத்தளத்தில் வெளியானதையடுத்து மாணவர்கள் இணையசேவை நிலையங்கள் மற்றும் தொலைத் தொடர்பு நிலையங்களில் கூடி நின்று தமது பெறு பேறுகளை அறிந்து கொள்வதற்கு முண்டியடித்ததைக் காணமுடிந்தது.

## பதவி விலகுவதற்கான...

இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளரான பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண தான் - கருணாவுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுத்ததாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து இவரைப் பதவியிலிருந்து நீக்க இராணுவத் தளபதி நடவடிக்கை எடுத்தாக முன்னர் செய்திகள் வெளிவந்தன.

எனினும், இதனைப் பின்னர் இராணுவத் தலைமையகம் மறுத்திருந்தது. இந்த நிலையிலேயே பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண, கருணா யிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையில் தொடர்ந்து வரும் அரசியல் அழுத்தம் காரணமாகவே, இவர் தனது பதவியை இராஜினாமாச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில ஊடுருவல் தாக்குதல்கள் இவருடைய நெறிப்படுத்தலின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.

## குரங்குபாஞ்சான்...

முடியுமெனக் கூறிய படையினர் அவர்களைத் தடுத்தனர். இதனால், இரு தரப்பினருக்கும் இடையில் வாக்கு வாதம் இடம்பெற்றது.

இதனையடுத்து உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்றபின்னரே அனுமதிக்க முடியுமென்று படையினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், விடுதலைப் புலிகள் தம்மைத் தடுத்து வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினருக்கு உடனடியாகத் தெரியப்படுத்தினர்.

கண்காணிப்புக்குழுவினர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் உடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாகத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து, இவர்களை தொடர்ந்தும் பயணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்ததை அடுத்து இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்பின்னர் குரங்குபாஞ்சானில் முஸ்லிம் பிரதிநிதிகளை எழிலன் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# காவல்துறை - ஐ.சி.ஆர்.சி.சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறையினருக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. நேற்று முற்பகல் தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகத்தில், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையிலான இந்தச் சந்திப்பு 3 மணிநேரம் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி இரசைல், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வதிவிடப் பிரதிநிதி சேவியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தமிழீழ தேசிய...

தமிழ் ஆலயத்தை உருவாக்கினார்.

இதில் தமிழ் கற்கும் மாணவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. தமிழ் ஆலயங்களும் பிறப்பெடுத்தன. இரா.நாகலிங்கம் தமிழுக்காக ஆற்றி வரும் பணியில் இவருக்கு பக்கபலமாக, பணியாற்றிவரும் இவரது துணைவியாரின் பங்களிப்பும் இங்கு நினைவு கூரத்தக்கது.

இன்று இவ்வமைப்புக்கள் வளர்ந்து ஜேர்மன் நாட்டில் 123 தமிழ் ஆலயங்களும், 6000 மாணவர்களும் உள்ளனர். இவர்களுக்கான ஆசிரியர்களாக 650 ஆசிரியர்கள் பணியாற்றி வருவதோடு, இவற்றினை நிர்வகிக்கும் பணியில் 350 பேர் உள்ளனர் என்பதும் குறிப் பிடத்தக்கது.

இரா.நாகலிங்கத்துக்கு விருது வழங்கிய இந்த நிகழ்வில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன், தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதி...

ஹான்ஸ் பிரட்ஸ்கர் நோர்வேக்குச் சென்றிருக்கிறார்.

## நாளை அரச...

றுக்கொள்ளப்பட்டு, கடந்த காலங்களில் நியமனம் வழங்கப்பட்டது.

தற்போது 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்

சாட்டையடுத்து இவரைப் பதவியிலிருந்து நீக்க இராணுவத் தளபதி நடவடிக்கை எடுத்தாக முன்னர் செய்திகள் வெளிவந்தன.

எனினும், இதனைப் பின்னர் இராணுவத் தலைமையகம் மறுத்திருந்தது. இந்த நிலையிலேயே பிரிகேடியர் கபில ஹெந்த விதாரண, கருணா விவகாரத்தில் ஏற்பட்ட சர்ச்சைகளையடுத்து குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே ஓய்வுபெற்றுச்செல்ல இராணுவத் தளபதியிடம் விண்ணப்பித்தார்.

பிரிகேடியர் ஹெந்த விதாரண தனது பதவி விலகலுக்கு இராணுவப் பதவியுயர்வு தொடர்பான முரண்பாடுகளே காரணம் என்று குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா விவகாரத்தில் இவர் தன்னிச்சையாகச் செயற்பட்டதோடு, கருணாவை நேரடியாகச் சந்தித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இந்த நிலையில் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளுக்கு இவருடைய செயற்பாடுகளே காரணம் எனவும், பாதுகாப்புத் தரப்பால் விசனம் வெளி

இராஜினாமாச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சில ஊடுருவல் தாக்குதல்கள் இவருடைய நெறிப்படுத்தலின் கீழேயே மேற்கொள்ளப்பட்டன.

இவருக்கு மிக நெருக்கமானவராகக் கருதப்படும் புளொட் மோகன் அண்மையில் கொலை செய்யப்பட்டமை இராணுவப் புலனாய்வு நடவடிக்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும்,

இந்தக் கொலையின் பின்னர், இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்காகச் செயலாற்றிய தகவல் சேகரிப்பாளர்களின் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தொடர்ந்து வெற்றிகரமான புலனாய்வுப் பிரிவாக இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவு செயற்படுவது கேள்விக்குறியாக மாறியுள்ளது எனவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து, இவர்களை தொடர்ந்தும் பயணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்ததை அடுத்து இவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்பின்னர் குரங்குபாஞ்சானில் முஸ்லிம் பிரதிநிதிகளை எழிலன் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## பாரிய ஆயுத...

கள், யுத்த டாங்கிகளை அழிக்கும் ஏவுகணைகள், துப்பாக்கி ரவைகள் மற்றும் யுத்த தளபாடங்கள் என்பன கொள்வனவு செய்யப்படவுள்ளன.

சீன அரச நிர்வாகத்தின் கீழுள்ள இந்த நொறிங்கோ நிறுவனம் தெற்காசியாவில் மிகப்பெரிய ஆயுத உற்பத்தி நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன மக்கள் குடியரசு இராணுவத்துக்கு ஆயுதங்களை வழங்கும் இந்த நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் அவசர சந்தர்ப்பங்களில் முப்படைகளுக்குத் தேவையான ஆயுத தளபாடங்களையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

வளர்ந்து ஜேர்மன் நாட்டில் 123 தமிழ் ஆலயங்களும், 6000 மாணவர்களும் உள்ளனர். இவர்களுக்கான ஆசிரியர்களாக 650 ஆசிரியர்கள் பணி

## ஜனாதிபதி...

ஹான்ஸ் பிரட்ஸ்கர் நோர்வேக்குச் சென்றிருக்கிறார்.

அவர் நோர்வே அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தியபின்னர், இந்த அழைப்புக்கு விரைவில் உரிய பதில் தருவார்கள்.

இராஜதந்திர ரீதியில் - உத்தியோகபூர்வமான முறையில் விடுக்கப்பட்ட இந்த அழைப்புக்கு நோர்வேத் தரப்பிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்ப்பார்ப்பதாகவும் ஜயந்த தனபால மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து விலகிய பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவிருப்பதாக அரச வட்டாரங்கள் முன்னர் தகவல் வெளியிட்டிருந்தன.

வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாளை அரச...

றுக்கொள்ளப்பட்டு, கடந்த காலங்களில் நியமனம் வழங்கப்பட்டது.

தற்போது 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்து, பட்டதாரிகளுக்கான ஆட்சேர்ப்பில் தம்மையும் சேர்த்துக்கொள்ளுமாறு கோரியே மறியற்போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இந்த மறியல் போராட்டம் குறித்து கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கவுள்ளதாக யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக முகாமைத்துவ பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.08.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.